Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 20 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :278 ஆவணி 18 ஆம் நாள் வியாழக்கிழமை 03 செப்ரெம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051



முச்சந்தி முரளி

"பலப்படுத்துறம் பலப்படுத்துறம் எண்டு இருக்கிறதையும் பறிகுடுக்கிறது எங்களுக்கு புதி சில்ல பாருங்கோ"

# 20ஆவது திருத்தத்துக்கு அமைச்சரவை அனுமதி!

## வரைவை வர்த்தமானியில் வெளியிடவும் முடிவு

கொழும்பு, பெப். 3
அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்ட வரைபுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நேற்று மாலை அமைச்சரவை கூடிய போது, 20ஆவது திருத்தச் சட்ட வரைபு சமர்ப்பிக்கப்பட்டது. நீதியமைச்சர் இந்தச் சட்ட வரைவை அமைச்சரவையில் சமர்ப்பித்தார்
இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கிய துடன், இதனை 18

# '20' நிறைவேறியதும் புதிய அரசமைப்பு!

## சொன்னதைச் செய்வதே 'மொட்டு' தம்பட்டம் அடிக்கின்றார் பிரதமர்



கொழும்பு, பெப். 3
"அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ள அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஒக்ரோபர் மாதத்துக்குள் நிறைவேற்றியே தீருவோம். அதன்பின்னர் புதிய அரசமைப்பின் சட்ட வரைவையும் தயாரிப்போம். அதையும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றியே தீருவோம்."
இவ்வாறு உறுதிபடத் தெரிவித்தார், பிரதமர் மஹிந்த ராஜபக்ச. 18

## குறைந்தளவு மழை இன்று பெய்யவாய்ப்பு

*நேற்று அதிக மழை*

யாழ்ப்பாணம், பெப். 3
வடக்கு கிழக்கில் இன்றும் மழை பெய்யவாய்ப்புள்ளது. எனினும், நேற்றைய மழை வீழ்ச்சியைவிட குறைந்தளவிலேயே இன்று மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது என்று வளிமண்டலவியல் ஆராய்ச்சி திணைக்களத்தின் திருநெல்வேலி 18

## வடக்கில் 90 சதவீதமான பட்டதாரிகள் கடமையேற்பு

யாழ்ப்பாணம், செப். 3
அரச சேவைக்கு உள்வாங்கப்பட்ட பட்டதாரிகளில் 90 சதவீதமானோர் வடக்கு மாகாணத்தில் நேற்றைய தினமே தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளனர் என உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. 18

## மூன்று வாரம் இராணுவ முகாமில்: கட்டாய தலைமைத்துவப் பயிற்சி

*அரச சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட பட்டதாரிகளுக்கே இந்த நிலைமை*

யாழ்ப்பாணம், செப். 3
நாடு முழுவதும் 50 ஆயிரம் பட்டதாரிகளை அரச சேவைக்கு உள்ளீர்க்கும் நிகழ்சித் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகள் மூன்று வார காலம் இராணுவ முகாமில் 18

## சிக்கலற்ற காணிகளுக்கு 3 மாதங்களில் உறுதிகள்

*ஜனாதிபதி பணிப்புரை*

கொழும்பு, செப். 3
மக்கள் பயன்படுத்தி வருகின்ற சிக்கலற்ற காணிகளுக்கு மூன்று மாதங்களுக்குள் காணி உறுதிப்பத்திரங் 18

## புலிகளுக்கு அதிகாரம் வழங்க மஹிந்த தயாராகவே இருந்தார்

### எரிக் சொல்ஹெய்ம் தகவல்



கொழும்பு, செப். 3
தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே நடைபெற்ற சமாதான பேச்சின்போது அப்போதைய ஜனாதிபதியும், இப்போதைய 18

## அரசமைப்பு உருவாக்க குழுவில் தமிழ் பேசும் இருவர் இணைப்பு

*அமைச்சரவை நேற்று அனுமதி*

யாழ்ப்பாணம், செப். 3
புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு 9 பேர் கொண்ட நிபுணர் குழுவை நியமிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
அதனையடுத்து இந்தக் குழுவில் 7 சிங்களவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுடன் தமிழ் பேசும் இருவரும் உள்ளடக்கப்பட்டுள்ளனர். கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சர்வேஸ்வரன் மற்றும் முஸ்லிம் பேராசிரியை நஜீமா அந்தக் குழுவில் நியமிக்கப்பட்டுள்ள னர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

*17 வருடங்களாக கூட்டமைப்பிடமிருந்த*

## நாவிதன்வெளி பிரதேச சபை பறிபோனது பெரமுனவிடம்!

மட்டக்களப்பு, பெப். 3
நாவிதன்வெளி பிரதேச சபையின்புதியதவிசாளராகசுயேச்சைக் குழு உறுப்பினரான அமரதாஸ ஆனந்த தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.
இதன்மூலம் 17 ஆண்டுகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசமிருந்த நாவிதன்வெளி பிரதேசசபையின் ஆட்சி கைமாறியது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகியிருக்கும் நாவிதன்வெளி பிரதேச சபைத் தவிசாளர் தவராசா கலையரசன் தனது தவிசாளர் பதவியை இராஜி 18

*ஐ.தே.க. உறுப்புரிமை நீக்கம்:*

## 38 பேருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கத் தடை

*மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு*

கொழும்பு, செப். 3
கட்சி உறுப்புரிமை நீக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் 38 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும் எதிராக எதிர்வரும் 10 ஆம் திகதி வரை அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.
மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப் 18

Techno World
தொழில்நுட்பக் கல்லூரி
A/L 2020 தொழில்நுட்ப பிரிவு
மாபெரும் விஷேட செயலமர்வு
ஆரம்பம்:05.09.2020 8.00 am - 2.30 pm
T.P: 077 017 5346

# 19இனை அகற்றுவதை அனுமதிக்க முடியாது!

## ஹிருணிகா தெரிவிப்பு



கொழும்பு, செப். 3

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தை அகற்றிவிட்டு 18ஆவது திருத்தத்தை மீண்டும் கொண்டுவருவதை ஏற்க முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது இந்த விடயம் தொடர்பில் நாட்டில் போதியளவு கருத்துப் பரிமாற்றங்கள் எவையும் இடம்பெறவில்லை. முன்னைய அரசு ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டமைக்கு 19ஆவது திருத்தம் காரணமில்லை. ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையிலான கருத்து வேறுபாடே காரணம். 19ஆவது திருத்தத்திலிருந்து பின்னோக்கிச் செல்வது ஒரு தீர்வாக அமையாது. எனவே 19ஆவது திருத்தத்தில் உள்ள தவறுகளைச் சரி செய்து, அதனைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என்றார்.

19ஆவதுதிருத்தத்தை மாற்றுவதற்கு கோத்தாபய அரசு கடும் முனைப்புடன் செயற்பட்டு வரும் நிலையில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அதற்குக் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்திவருகின்றது. ஹிருணிகா வெளிப்படுத்திய இதே கருத்தை முன்னதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-க-இ)

## உச்சத்தில் சூரியன்; மக்களே அவதானம்

செப்ரெம்பர் 8ஆம் திகதிவரை சூரியன் இலங்கைக்கு நேராக உச்சம் கொடுப்பதால் நாட்டின் பல பகுதிகளில் கடும் உஷ்ணமான வானிலை நிலவும் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதனால் ஏற்படும் அபாயத்தைக் குறைக்க சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் இடர் முகாமைத்துவ நிலையம் மக்களைக் கேட்டுள்ளது.

அதிகப்படியான வெப்பத்தால் நீரிழப்பு ஏற்படுவதால் உமிழ்நீர் அதிகமாக சுரக்கும் எனவும் இது தசைப் பிடிப்பு உள்ளிட்ட நோய்களுக்கு வழிவகுக்கும் எனவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

பிள்ளைகள் அதிக வெப்பநிலையில் வியர்க்கும் விளையாட்டுகளில் ஈடுபடுவதால் அவர்களின் உடல் வெப்பநிலையைப் பேணுவதில் சிரமம் ஏற்படலாம், அத்துடன் பக்கவாதம் உருவாகலாம் என்றும் இடர் முகாமைத்துவ நிலையம் எச்சரித்துள்ளது.

திறந்த வெளிகளில் பணிபுரிவோர் போதுமான அளவு தண்ணீர் குடிக்க வேண்டும். முடிந்தவரை நிழலான இடங்களில் ஓய்வு எடுக்க வேண்டும் என்றும் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

அதிகம் வெப்பம் உள்ள பகுதிகளில் வசிக்கும் வயதானவர்கள் அல்லது நோய் வாய்ப்பட்டவர்கள் குழந்தைகள் வாகனங்களில் பயணிக்கும்போதும், ஏனைய நிலைமைகளின்போதும் தற்போதைய உஷ்ண நிலைமை தொடர்பாக அதிக அக்கறையுடன் செயற்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதேவேளை, அதிக வெப்பத்தில் இருந்து பாதுகாப்பு பெற முடிந்தவரை வெள்ளை நிற ஆடைகளை அணிவது சிறந்தது என்று சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (எம்-இ)

## அபுதாபி விபத்தில் இலங்கையர் சாவு

கொழும்பு, செப். 3

மத்திய கிழக்கு நாடான ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் இலங்கையைச் சேர்ந்த இளைஞர் உயிரிழந்துள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் தலைநகரான அபுதாபியில் திடீரென எரிவாயுத்தொட்டி வெடித்தமையினால் விபத்து நேர்ந்துள்ளது.

இவ் விபத்தில் மாத்தறையைச் சேர்ந்த 28 வயதான இளைஞரே உயிரிழந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது. (வ-இ)

## விதிமீறிய சாரத்தியம் 100,500 ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், செப். 3

போக்குவரத்து விதிகளை மீறி வாகனம் செலுத்திய இருவருக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தால் ஒரு லட்சத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

காப்புறுதிப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம், வருமான வரிப்பத்திரம் என்பன இன்றி வாகனம் செலுத்திய வல்வெட்டித்துறை பகுதியைச் சேர்ந்த சாரதிக்கு 50 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அத்துடன் மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியவருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ம-25)

## முதிரைக்குற்றிகள் கடத்திய சாரதி மல்லாகத்தில் கைது

யாழ்ப்பாணம், செப். 3



20 முதிரைக் குற்றிகளுடன் சாரதி யொருவர் காங்கேசன்துறை குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சிவில் உடையில் சிறப்புக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த காங்கேசன்துறை பொலிஸார் மல்லாகத்தில் இருந்து தெல்லிப்பளை நோக்கி வந்த ஹன்டர் ரக வாகனத்தை மறித்துச் சோதனையிட்டதில் மேற்படி முதிரைக் குற்றிகள் மீட்கப்பட்டன. மல்லாகம் மயிலணிப் பகுதியைச் சேர்ந்த சாரதியே கைது செய்யப்பட்டார். (ம-25)

## வெடிகுண்டு வைத்திருந்தவர் புதுக்குடியிருப்பில் கைது

முல்லைத்தீவு, செப். 3

மிருக வேட்டைக்குப் பயன்படுத்தப்படும் வெடிகுண்டுகள் மற்றும் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் புதுக்குடியிருப்பில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இருட்டுமடு கிராமத்தைச் சேர்ந்த ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார். புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குக் கிடைத்த தகவலுக்குமைய ஐ.பி.பண்டார தலைமையிலான பொலிஸ் குழு இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தது.

பன்றி வேட்டைக்குப் பயன்படுத்தப்படும் 7 வெடிகுண்டுகளும், 20 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் என்றும் புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ-ம-19)

## ஹெரோய்ன் நுகர்ந்தாரென இளைஞர் நேற்றுக் கைது!

யாழ்ப்பாணம், செப். 3

ஹெரோய்ன் நுகர்ந்தார் என்ற குற்றச்சாட்டில் குருநகர்ப் பகுதியில் இளைஞன் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட இளைஞனுக்கு 20 வயது. அவரிடம் மேற்கொண்ட சோதனையில் மேலும் 30 கிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது. அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. கைதானவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-25)




## மூச்சுக் காற்றூட்ட கருவி இலங்கைக்கு அன்பளிப்பு

200 புதிய அதிநவீன மூச்சுக்காற்றூட்டக் கருவிகளை (வெண்டிலேட்டர்) அமெரிக்கா இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்தக் கருவிகளை இலங்கை மற்றும் மாலைதீவுக்கான அமெரிக்க தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ் சுகாதாரத்துறை அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியிடம் கையளித்துள்ளார்.

இந்த கருவி கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்கு இலங்கைக்கு பெரிதும் உதவும் என அமெரிக்க தூதுவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையர்களின் நலம் மற்றும் ஆரோக்கியம் தொடர்பில் அமெரிக்கா அதிக அக்கறை கொண்டுள்ளது. கடந்த 20 ஆண்டுகளில் அமெரிக்கா இலங்கைக்கு 26 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான சுகாதார உதவிகளை வழங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# வழங்கப்பட்ட நியமனங்களில் அழுத்தங்களுக்கு இடமில்லை!

## ஜனாதிபதி கோத்தாபய திட்டவட்டம்



கொழும்பு, செப்ரெம்பர் 3

ஆழமாக சிந்தித்து வழங்கப்பட்ட நியமனங்களை எந்தவொரு அழுத்தங்கள் காரணமாகவும் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்று ஜனாதிபதி தெரிவித்தார் என்று அவரின் ஊடகப்பிரிவால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்ப ட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

அண்மையில் ஜனாதிபதி மற்றும் அரசால் வழங்கப்பட்ட பல்வேறு நியமனங்களுக்கு எதிராக பல்வேறு அழுத்தங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்த நியமனங்கள் அனைத்தும் எமது நாட்டு இறையாண்மை, தேசிய பாதுகாப்பு மற்றும் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்தைச் செயற்படுத்துவதற்காக மிகவும் சிறந்த விடயங்களை கருத்திற் கொண்டே வழங்கப்பட்டுள்ளன. அதே போன்று நியமிக்கப்பட்ட வர்களின் தேசப்பற்று, தகைமைகள் மற்றும் பின்புலம் பரீட்சிக்கப்பட்டு சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் அரசின் கொள்கையை சிறப்பாக முன்னெடுப்பதற்கு இயலுமான வகையில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஆழமாகச் சிந்தித்து நியமிக்கப்பட்ட நியமனங்களை மாற்றி, பல்வேறு அழுத்தங்களின் காரணத்தினால் வேறு ஒருவரை அதற்காக நியமிப்பதற்கு எவ்வித எதிர்பார்ப்பும் தம்மிடம் இல்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

அதனால் சில நியமனங்களுக்கு எதிராக அதனை மாற்றுமாறு தமக்கு அல்லது அரசாங்கத்திற்கு அழுத்தங்கள் கொடுக்க வேண்டாமென ஜனாதிபதி அனைவரிடமும் கேட்டுக்கொண்டார். நியமனங்களுக்கு எதிரான கருத்துக்கள் மற்றும் எண்ணங்களை முன்வைப்பதன் மூலம் தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள கடமைகள், விடயதானங்களை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு முடியாமல் போவதோடு மட்டுமன்றி சமுதாயத்தில் அந்நபர்கள் பற்றி தப்பான எண்ணங்கள் ஏற்படுவதினால் அரசாங்கம் முன்னெடுத்து வருகின்ற வேலைத்திட்டங்களும் வீணடிக்கப்படும் மென்பதே தனது கருத்தாகுமென ஜனாதிபதி குறிப்பிட்டார் என்றுள்ளது. (ம இ)

# மீண்டும் அதிர்ந்தது கண்டி

கொழும்பு, செப். 3

கண்டிதிகன உள்ளிட்ட சில பகுதி களில் மீண்டும் நிலஅதிர்வு உணரப்பட்டது என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். கடந்த 29ஆம் திகதியும் இவ்வாறான நிலநடுக்கம் ஏற்பட்டதால் மக்கள் அச்சமடைந்திருந்தனர். அன்றைய தகவல்களின்படி அன்றிரவு 8.40 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்தச் சம்பவம் நடந்து நான்கு நாள்களுக்குப் பின்னர், நேற்றுக் காலை மீண்டும் நில அதிர்வு உணரப்பட்டது.

முன்னர் உணரப்பட்ட நிலநடுக்கம் தொடர்பாக கடந்த 30ஆம் திகதி அறிக்கையொன்றை விடுத்திருந்த விசாரணைக்குழு, கண்டி - தலாத்துஓயாவை அண்மித்த பகுதிகளில் ஏற்பட்ட அதிர்வுக்கு 3 சம்பவங்கள் காரணங்களாக அமையலாம் என்று தெரிவித்திருந்தது.

கற்குவாரியில் வெடிவைக்கப்பட்டதால் ஏற்பட்ட அதிர்வு இதற்குக் காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. அவ்வாறில்லை எனின் சுண்ணாம்பு கற்பாறை உடைந்து வீழ்ந்திருப்பதற்கான சாத்தியமுள்ளது. அத்துடன் விக்ரோரியா உள்ளிட்ட அதை அண்மித்த நீர்த்தேக்கங்களில் ஏற்பட்ட உயர் நீர் அழுத்தம் மூன்றாவது காரணமாகக் கூறப்பட்டது. இந்த நிலையில் நேற்றும் இவ்வாறானதொரு நில நடுக்கம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-எ-இ)

# இந்தியாவில் இனி பப்ஜிக்குத் தடை!!

புதுடெல்லி, செப். 3

பப்ஜி விளையாட்டு, டிக்டொக் விபினன் செயலி உள்ளிட்ட மேலும் 117 கைபேசி செயலிகளை இந்தியாவின் தகவல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு தடை செய்துள்ளது.

முன்னதாக டிக்டொக் உள்ளிட்ட பல சீனச் செயலிகளை இந்தியா தடை செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

# சு.கவை அழித்தது மைத்திரிபாலவே

## கொதிக்கின்றார் சந்திரிகா

"தலைமைப் பதவிக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை முற்றாக அழித்தார். எனது தந்தையால் உருவாக்கப்பட்டு தாயாரால் வலுப்படுத்தப்பட்ட சுதந்திரக் கட்சியின் தற்போதைய நிலையைப் பார்த்து மிகவும்கவலையடைகின்றேன்."

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவருமானசந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.


ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் 70 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், சந்திரிகா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"சிலவேளைகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைக்கு நானும் காரணம் என நான் நினைப்பதுண்டு. நான் செய்த விடயங்களால் கட்சிக்கு பாதிப்பு ஏற்படவில்லை; செய்யாத விடயங்களால்தான் பாதிப்பு ஏற்பட்டது.

பலரின் வேண்டுகோள்கள் காரணமாக நான் மீண்டும் 2015 இல் அரசியலில் ஆர்வம் காட்டினேன். நாட்டினதும் சுதந்திரக் கட்சியினதும் அழிவைக் காப்பாற்ற முடியும் என நினைத்தே அவ்வாறு செய்தேன். தலைமைப் பதவிக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை முற்றாக அழித்தார்" என்றார். (கு-22)

# சங்கானையில் கைகலப்பு மூவர் நேற்று கைதாகினர்



யாழ்ப்பாணம், செப். 3

வங்கி ஒன்றின் முகாமையாளருக்கும் இளைஞர் ஒருவருக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற மோதலை அடுத்து மூன்று கடைகளின் உரிமையாளர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இது தொடர்பில் மேலும் தெரியவருவது.

வங்கியின் முகாமையாளர் வங்கிக்கு முன்னால் உள்ள வீதியில் நின்ற பெண்ணொருவருடன் உரையாடிக் கொண்டிருந்தார். இதனை அவதானித்த கடையில் உள்ள இளைஞன் அவர்களை கிண்டல் செய்தார் என்று கூறப்படுகிறது. இதனால் முகாமையாளருக்கும் குறித்த இளைஞனுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

வங்கி முகாமையாளர் மானிப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து பொலிஸார் அங்கு வந்தனர். மோதலில் ஈடுபட்ட இளைஞன் தப்பிச் சென்றதையடுத்து அந்தக் கடையின் உரிமையாளரையும் அருகில் உள்ள ஏனைய இரு கடைகளினது உரிமையாளர்களையும் பொலிஸார் கைது செய்தனர். அவர்களிடம் விசாரணைகள் இடம்பெற்றன. (ம-27)

# பழிவாங்கலை ஆராயும் குழு அறிக்கை பிரதமரிடம்

கொழும்பு, செப். 3

அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளானோர் தொடர்பாக ஆராயும் குழுவின் முதன்மை அறிக்கை அலரி மாளிகையில் வைத்து பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டு தொக்கம் 2019 ஆண்டு வரையான காலப்பகுதியில் அரச மற்றும் அரை அரச சேவையில் நிர்வாக ரீதியில் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளான ஆறாயிரத்து 952 பேரில் இருவர் இதுவரை இந்தக்குழுவில் மேன்முறையீடு செய்துள்ளனர்.

அதில், ஆயிரத்து 152 பேரின் மேன்முறையீடுகள் குறித்த விசாரணைகள், அவதானிப்புகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் என்பன இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

20152019 காலப்பகுதியில் அரசியல் பழிவாங்கல்கள் இடம்பெற்றுள்ள விதம், குழுவில் முன்வைக்கப்பட்ட மேன்முறையீடுகள் குறித்து ஆராயும்போது தெளிவாகின என்று குழு உறுப்பினர்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு விளக்கினர்.


அரசியல் ரீதியில் பழிவாங்கல்களுக்கு உள்ளான அனைவருக்கும் நீதியை நிலைநாட்டுவது இந்தக்குழுவின் கடமையாகும் என்றும், நிறுவன தலைவர்களுக்கு அறிவிக்கப்படும் குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால், அமைச்சரவைக்கு தெரியப்படுத்தி, அந்தந்த துறைகளுக்குப் பொறுப்பான அமைச்சர்களினூடாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்குமாறு பிரதமர் குழு உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தினார்.

குழுவினால் இதுவரை ஆயிரத்து 152 மேன்முறையீடுகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, 484 அவதானிப்புக் கோப்புகள் பல்வேறு நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. விசாரணைக்காக குழுவுக்கு அழைக்கப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை 372 ஆகும்.

கொவிட்19 காரணமாக 3 மாத காலமாக குழுவின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்ட போதிலும், இதுவரை தொடர்ந்து நடைபெற்றுவரும் விசாரணைகளுக்கு அமைய நிறுவனத் தலைவர்கள் 34 பேர் குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்று அரசியல் பழிவாங்கல்கள் குறித்து ஆராயும் குழுவின் செயலாளர் சட்டத்தரணி சதுரிக்கா விஜேசிங்க இந்த சந்திப்பில் சுட்டிக்காட்டினார். (த)

# விக்னேஸ்வரனுக்கு வந்த மிரட்டல் ஒட்டு மொத்த தமிழருக்குமானதே!

## ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் காட்டம்



யாழ்ப்பாணம், செப்.3

**தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருக்கு விடுக்கப்பட்ட மிரட்டலும் அச்சுறுத்தலும் அனைத்து தமிழ் மக்களுக்கும் விடுக்கப்பட்டதாகவே கருதவேண்டியுள்ளது என்று தெரிவித்துள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப் பேச்சாளருமான சுரேஷ் பிறேமச்சந்திரன், அத்தகைய மிரட்டலையும் அச்சுறுத்தலையும் சாதாரணமாகக் கருதிவிட முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சி.வி. விக்னேஸ்வரன் நாடாளுமன்றத்தில் ஆற்றிய கன்னி உரை தொடர்பாக சிங்கள பௌத்த மேலாதிக்க இனவாதிகள் நாடாளுமன்றத்தில் தெரிவித்த கண்டனங்களும் அநாகரிகமான வார்த்தைப் பிரயோகங்களும் கொலை அச்சுறுத்தல்களும் மிரட்டல்களும் வெறுமனே விக்னேஸ்வரனுக்கு எதிரானது மாத்திரமல்ல. அவரது கொள்கையைப் பேசக்கூடிய அனைத்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விடுக்கப்பட்ட மிரட்டலாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களின் இந்த மிரட்டல்கள் தொடர்பாக நாடாளுமன்றத்திலோ வெளியிலோ தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மௌனிகளாக இருப்பதானது அவர்கள் பேசுகின்ற தேசியத்திற்கும் அவர்கள் மக்களிடம் பெற்றுக்கொண்ட ஆணைக்கும் நேரெதிரான செயற்பாடாகவே நாங்கள் கருதுகின்றோம். ஆகவே, சர்வதேச நாடாளுமன்ற அவைக்கும், அதேபோல் பொதுநலவாய நாடாளுமன்ற அவைக்கும் இந்த அச்சுறுத்தல் தொடர்பாக தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி உரிய முறைப்பாடுகளை மேற்கொள்ளும் - என்றுள்ளது. (ப)

# மகனின் உயிரிழப்பு குறித்த வழக்கை விரைவுபடுத்துங்கள்

## சட்டமா அதிபருக்கு தாய் கடிதம்

கொழும்பு, செப்.3

இலங்கையில் மர்மமான முறையில் உயிரிழந்த தனது மகனின் வழக்கை விரைவுபடுத்துமாறு கோரி பிரித்தானியாவில் உள்ள தாய் ஒருவர் சட்டமா அதிபர் டப்புல டி லிவேராவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

37 வயதான சார்ள்ஸ் ஜீவன் என்பவர் போதைப் பழக்கத்துக்கு சிகிச்சை பெறுவதற்காக 2017 நவம்பரில் இலங்கைக்கு வந்தார். ஆஸ்திரேலிய மறுவாழ்வு மையத்தின் இலங்கை கிளையான களுத்துறையில் அமைந்துள்ள சீசன்ஸ் லங்கா மறுவாழ்வு மையத்தில் இந்தச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. எனினும் 2018 ஜனவரியில் கொழும்பில் உள்ள பூங்காவில் மர்மமான முறையில் சார்ள்ஸ் இறந்து கிடந்தார். அவர் இறந்த சில நாள்களுக்குப் பிறகு, மறுவாழ்வு மையம் மூடப்பட்டது அத்துடன் சிகிச்சையில் உள்ள மற்ற நபர்கள் அந்தந்த நாடுகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். இந்த இறப்பு கொலை என்ற கோணத்தில் நடத்தப்பட்டு தற்போது விசாரணையில் உள்ளது. இந்த நிலையிலேயே உயிரிழந்த சார்ள்ஸ் ஜீவனின் தாயார் மகனின் இறப்புக்கு நீதி கோரியுள்ளார். அத்துடன் தான் அனுப்பிய கடிதத்தில் இந்த வழக்கை உயர் நீதிமன்றத்துக்கு மாற்றும்படியும் கோரிக்கை விடுத்துள்ளார். (ப-இ)

# சிங்கராஜ வனத்தில் இடம்பெறுவது வில்பத்துவில் நடந்தால் இனவாதமா?

## இம்ரான் எம்.பி. சீற்றம்

திருகோணமலை, செப்.3

சிங்கராஜ வனப் பகுதியில் அபிவிருத்தியாக நோக்கப்படுவது வில்பத்துவில் இனவாதமாக நோக்கப்படுகிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

சிங்கராஜ வனத்தின் ஒரு பகுதியை ஊடறுத்து வீதி ஒன்று அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து எழுந்த சர்ச்சையால் அந்த இடத்துக்குச் சென்ற ஜனாதிபதி அந்த வீதியின் நிர்மாணப் பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்க அனுமதி அளித்திருந்தார். சிங்கராஜ வனத்தை ஒட்டி வாழும் மக்களுக்குக் கிடைக்கும் அபிவிருத்தி வில்பத்துவை அண்டி வாழும் மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. போரால் இடம்பெயர்ந்த அந்தப் பகுதி மக்கள் அவர்களின் சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்தபோது வில்பத்து வனப்பகுதியை அம் மக்கள் அழிக்கிறார்கள் எனக் கூறியவர்களே இன்று வனப்பகுதிக்குச் சேதம் ஏற்படாமல் பாதையை அமைக்க முடியும் எனக் கூறுகின்றனர். வனப்பகுதிக்கு பாதிப்பு ஏற்படாமல் பாதை அமைக்க முடியும் என்றால், வனப்பகுதிக்கு பாதிப்பு ஏற்படாமல் மக்கள் மீள்குடியேறவும் முடியும் - என்றார். (ப)

# மேட்டு நிலப்பயிர்கள் வெள்ளத்தால் அழிவு



மன்னார்.செப்.3

மன்னாரில் கடும் மழை காரணமாக, மேட்டு நிலப்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

மேட்டு நிலப்பயிர்களான நிலக்கடலை, உழுந்து, பயறு, கௌப்பி போன்றவை வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

நானாட்டான், மாந்தை மேற்கு, மடு மற்றும் முசலி போன்ற மன்னார் பெருநிலப்பரப்புப் பகுதிகளில் செய்கை பண்ணப்பட்ட சிறு தானியங்கள் அழிவடைந்துள்ளன.

நானாட்டான், மடுக்கரை, இராசமடுப் பகுதியில் பயிரிடப்பட்ட மரக்கறிகளும் அழிவடைந்துள்ளன.

வெள்ளத்தை வெளியேற்றி, பயிர்களைக் காப்பாற்றும் நடவடிக்கைகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். (க-213)



இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 154 ஆவது ஆண்டு தினத்தை முன்னிட்டு வவுனியா பொது வைத்தியசாலையில் சிரமதானப் பணி ஒன்று பொலிஸாரால் நேற்று முன்னெடுக்கப்பட்டது. அத்தோடு நேற்றுக் காலை காமினி மகாவித்தியாலயத்தில் மரம் நடும் நிகழ்வுகளும் 10.30 மணிக்கு பிரதான பொலிஸ் நிலையத்திலுள்ள பிள்ளையார் ஆலயத்தில் சிறப்பு பூசை வழிபாடும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (ப-110,222,18)

# விக்கி, கஜேந்திரகுமார் தனிநாடு கோரவில்லை

## குமரகுருபரன் தெரிவிப்பு

நாடாளுமன்றத்துக்கு மக்களால் தெரிவுசெய்யப்பட்ட முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனும், கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் தமிழ் மக்களின் அபிலாசைகளைத்தான் வலியுறுத்துகின்றனர். ஒன்றுபட்ட நாட்டுக்குள்தான் தீர்வை எதிர்பார்க்கின்றார்கள். தனிநாடு கோரவில்லை என்று மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கலாநிதி குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

விக்னேஸ்வரனையும், கஜேந்திரகுமாரையும் இனவாதிகளாகப் பேசுகின்றார்கள். சரத் வீரசேகர இனவாதத்தைப் பேசிக்கொண்டு இவர்களை இனவாதிகள் என்று சொல்வதற்கு எந்த அருகதையும் கிடையாது. தமிழ் மக்களின் அபிலாசைகளைத்தான் அவர்கள் பேசுகின்றார்கள். இனவாதம் பேசுவதில்லை ஒன்றுபட்ட ஐக்கிய இலங்கைக்குள் ஓர் அரசியல் தீர்வை ஏற்றுக்கொள்ளத் தயார் என்று தெளிவாகச் சொல்லியுள்ளார்கள் தமிழ் மக்கள் விட்டுக் கொடுப்பு இல்லாமல் இருக்கவில்லை. போர் நடைபெற்றது உண்மை. மக்கள் படுகொலைசெய்யப்பட்டமை, காணாமல் ஆக்கப்பட்டமை உண்மை. இதற்காக சிங்கள தேசம் மனநீதியுடனும், மனுநீதியுடனும் பதில் சொல்லவேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்களை கையில் ஒப்படைத்தவர்கள் இன்றும் சாட்சியமாக இருக்கின்றார்கள். இதற்குப் பதில் சொல்லவேண்டும் - என்றார் (ப-19)

# அரச வேலை கிடைத்தும் பட்டதாரிகள் வரிசையில்

## வரவை உறுதிப்படுத்தினர்

சாவகச்சேரி, செப் 3

50 ஆயிரம் பேருக்கான வேலைவாய்ப்பில் தெரிவு செய்யப்பட்ட தென்மராட்சியைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகள், தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நீண்ட வரிசையில் நின்று தமது வரவைப் பதிவு செய்தனர்

வேலைவாய்ப்பற்ற 50 ஆயிரம் பட்டதாரிகளை அரச சேவைக்குள் உள்ளீர்ப்புச் செய்யும் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த பட்டதாரிகள் காலையிலேயே பிரதேச செயலகத்துக்கு வந்தனர். 300க்கு மேற்பட்ட ஆண், பெண் பட்டதாரிகள் அங்கு காணப்பட்டமையால் அனைவரையும் வரிசையாக வந்து வரவைப் பதிவு செய்யுமாறு கூறியதையடுத்து பட்டதாரிகள் நீண்ட வரிசையில் நின்று கையொப்பமிட்ட பின்னர் செயலகத்திற்குள் சென்றனர். (ப-9)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தன் கழுத்தைத் தாக்கும் அம்பு!

வடிவேலு நடித்து உலகப்புகழ் அடைந்த திரைப்படம் இம்சை அரசன் 23ஆம் புலிகேசி. இந்தப் படத்தில் வடிவேலு தனது அமைச்சர் ஒருவருடன் காட்டுக்கு வேட்டையாடச் செல்வார். எதிரே ஒரு கரடி வந்துநிற்கும். கரடியை இலக்கு வைக்கின்றேன் என்று புலிகேசி மன்னன் (வடிவேலு) அம்பெய்ய முற்படுவார். அவர் அம்பைத் தலைகீழாகப் பிடித்து தன் கழுத்தைத் தானே இலக்கு வைத்து அம்பெய்ய எத்தனிப்பார். இதே நிலைதான் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏற்பட்டுள்ளது. அது எய்யும் அம்புகள் அனைத்தும் மீண்டும் அதையே தாக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. வியூகம் வகுக்கின்றோம் என்று கூறிக்கொண்டு வெறும் பித்தலாட்டங்களை வெளிப்படுத்தும் ஒரு சில முரண் சிந்தனையாளர்களால் வந்த இழிநிலைதான் இது.

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும் வீழ்ச்சியைச் சந்தித்தது. அந்த அமைப்பில் உள்ள ஒரு சிலரின் தமிழ்த் தேசிய நீக்க நடவடிக்கைகளால் கூட்டமைப்புக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டது என்று பொதுவாகச் சொல்லப்படுகின்றது. இந்தத் தேர்தலில் கூட்டமைப்புக்கு தேசியப் பட்டியல் மூலம் ஓர் ஆசனம் கிடைத்தது. இந்த ஆசனம் தமிழரசுக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராசாவுக்கு வழங்கப்பட வேண்டும் என்று பலரும் விரும்பினர். அதற்கு உரிய அழுத்தங்களைக் கொடுத்தனர். ஆனால் ஓரிருவரின் சூழ்ச்சியால் அந்த ஆசனம் அம்பாறை நாவிதன்வெளி பிரதேச சபையின் தவிசாளரான கலையரசனுக்கு வழங்கப்பட்டது. கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் ஏனைய தலைவர்களுடன் எவ்விதக் கலந்துரையாடலும் இல்லாமல் அவரச அவசரமாகவும் தன்னிச்சையாகவும் இந்த முடிவு எடுக்கப்பட்டது. இதன் விளைவாக நாவிதன்வெளி பிரதேச சபையின் அதிகாரம் தற்போது கைமாறியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்பதற்காக தவிசாளர் பதவியில் இருந்து கலையரசன் விலகியதை அடுத்து தவிசாளருக்கான தேர்வு நேற்று இடம்பெற்றது. ஒரு வாக்கு வித்தியாசத்தில் பெரமுன ஆட்சியைக் கைப்பற்ற 17 வருட நீண்ட ஆதிக்கத்தை இழந்து பரிதாபகரமானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. மாவை சேனாதிராசா என்ற ஒரு நபரை ஓரங்கட்டுவதற்காக எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கை இன்று ஒரு பிரதேச சபையையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இருந்து பறித்தெடுத்துள்ளது.

அரசியல் என்பது தனியே ஓரிருவரை இலக்கு வைத்துச் செயற்படும் விடயம் இல்லை. அதற்குத் தூரநோக்கு இருத்தல் வேண்டும். தூரநோக்கின்றிய சிந்தனையாளர்களால் அழிவுகளே ஒன்றன்பின் ஒன்றாக வரும் என்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகப் பிந்தியதும், ஆகச் சிறந்ததுமான எடுத்துக்காட்டு. அந்தக் கட்சியில் உள்ளவர்கள் இனியாவது இதய சுத்தியுடன் நடந்துகொள்ள வேண்டும். ஒரு நகர்வு தவறும் பட்சத்தில் ஏற்படும் பிரமாண்டமான விளைவுகளைச் சிந்திக்க வேண்டும். எதிரியைத்தான் இலக்குவைக்க வேண்டுமே தவிர மாறான தத்தம் தலைகளை அல்ல.

### வடக்கில் தொழிலாளர்களுக்கான

# 6,000 வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கையை மேற்கொள்க

### பொது ஊழியர் சங்கங்கள் கூட்டாகக் கோரிக்கை

வவுனியா, செப்.3

**வடமாகாணத்தில் காணப்படும் 6000 தொழிலாளர் வெற்றிடங்களையும் நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் மற்றும் புதிய அரச பொது ஊழியர் சங்கம் என்பன கூட்டாகக் கோரிக்கை முன்வைத்துள்ளன.**

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் மற்றும் புதிய அரச பொது ஊழியர் சங்கப் பிரதிநிதிகளுக்கும், வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும்,நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபனுக்கும் இடையில் வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

பொது ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணத்தில் 6000 தொழிலாளர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அவற்றைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். வவுனியா நகரசபையை விரைவாக மாநகர சபையாகத் தரமுயர்த்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். வவுனியா நகரசபையில் உள்ள 11 தொழிலாளர்கள் வெற்றிடங்களுக்கு நேர்முகத் தேர்வுகள் நடைபெற்றும் நியமனம் இன்னும் வழங்கப்படவில்லை. இதனை வழங்குவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் தனியான பிரதேச சபை ஒன்றை நிறுவுவதற்கு அரசாங்கத்துடன் பேசி நடவடிக்கை எடுக்க வேண்டும். முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் காணப்படும் மருத்துவர் பற்றாக்குறையைத் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர்.

அவர்களுடைய கோரிக்கைகள் தொடர்பில் வடமாகாண ஆளுநர் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருடன் கலந்துரையாடி உரிய தீர்வை விரைவில் பெற்றுத் தருவேன் என நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் தெரிவித்தார்.

(ப-18)



## கொரோனாவில் இருந்து விடுபட பாதயாத்திரை!

யாழ்ப்பாணம், செப்.3

கொரோனாத் தொற்றில் இருந்து இலங்கை விடுபட வேண்டும் என்று வேண்டி யாழ்ப்பாணத்தில் இருந்து காலிக்கு பாதயாத்திரை ஆரம்பமாகியுள்ளது. காலி, அக்மீமன பகுதியைச்சேர்ந்த 45 வயது டைய பாலகுமார என்பவர், கடந்த 8ஆம் திகதி காலியில் இருந்து பாதயாத்திரையை ஆரம்பித்து நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தார். நேற்று மீண்டும் அவர் யாழ்ப்பாணத்திருந்து காலியை நோக்கிப் பாதயாத்திரையை ஆரம்பித்தார்.

யாழ்ப்பாணம் நாக விகாரையின் விகாராதிபதி மீகா ஜந்துரஸ்ரீ விமலரத்ன தேரரைச் சந்தித்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்ட அவர் தனது பாதயாத்திரையை ஆரம்பித்தார்.

51ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் டெலிட் ரத்னாயக்க இலங்கைக் கொடியை வழங்கி பாதயாத்திரையை ஆரம்பித்து வைத்தார்.

(எ-25)

## 20ஐ நிறைவேற்ற சர்வஜன வாக்கெடுப்பு அவசியமில்லை!

கொழும்பு, செப்.3

20ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நாடாளுமன்ற வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்ற முடியும் என்றும், சர்வஜன வாக்கெடுப்பு அவசியமில்லை என்றும் சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சரின் செயலருக்கே அவர் இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.

20ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்ட வரைவு சட்டமா அதிபரின் பார்வைக்காக அனுப்பப்பட்டிருந்தது.

அரசமைப்பின் 83ஆவது பிரிவின்படி சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டிய அவசியமில்லை. நாடாளுமன்ற வாக்கெடுப்பே போதுமானது என்று சட்டமா அதிபர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## வழமைக்கு திரும்பின கல்வி நடவடிக்கைகள்

கொழும்பு, செப்.3

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக கடந்த 5 மாதங்களாக மட்டுப்படுத்தப்பட்டிருந்த பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் நேற்று முதல் வழமைக்குத் திரும்பியுள்ளன என்று கல்வி அமைச்சுத் தெரிவித்துள்ளது.

தரம் 6 முதல் 13ஆம் தரம் வரையான மாணவர்களுக்கான பாடசாலைகள் நேற்று முதல் வழமை போன்று காலை 7.30 மணி முதல் 1.30 மணி வரையில் இடம்பெறும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

முதலாம் தரம் முதல் ஐந்தாம் தரம் வரையான மாணவர்களுக்கு செப்ரெம்பர் 8ஆம் திகதி முதல் கற்றல் நடவடிக்கைகள் வழமைக்கு திரும்பும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் ஏற்பட்டதையடுத்து, கடந்த மார்ச் மாதம் பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டன. தற்போது கொரோனா வைரஸின் தாக்கம் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதை அடுத்து, கட்டம் கட்டமாக பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனினும் பாடசாலை நேரங்களிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. அதற்கமைய தரம் 10 மற்றும் 13 வகுப்பு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் தினமும் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணிவரை முன்னெடுக்கப்பட்டிருந்தது. (எ-இ)

## 68 குடும்பங்கள் இடம்பெயர்வு

மன்னார்,செப்.3
மன்னாரில் பெய்து வரும் கடும் மழை காரணமாக, சாந்திபுரத்திலிருந்து 68 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.
இவர்கள் சாந்திபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக் கட்டடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதனால் அந்தப் பாடசாலை இயங்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-60)

## மழை வீழ்ச்சி அதிகரிக்கும்

கொழும்பு,செப்.3
நாட்டின் பல பிரதேசங்களில் கடும் மழை பெய்து வருகின்றது. இந்தக் காலநிலை சில நாள்களுக்குத் தொடரும். சில இடங்களில் 200 மில்லி மீற்றருக்கும் மேற்பட்ட கடும் மழை வீழ்ச்சி பதிவாகக் கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
நாட்டைச் சூழவுள்ள வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தளம்பல் நிலையே இதற்குக் காரணமாகும். அதற்கமைவாக தற்பொழுதுள்ள மழையுடன் கூடிய காலநிலை தொடரக்கூடும் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (சு-இ)

## காலி மாவட்டத்தில் 7,031 பேர் பாதிப்பு

கொழும்பு,செப்.3
தற்போது நிலவும் சீரற்ற வானிலையால், காலி மாவட்டத்தில் 6 பிரதேச செயலர் பிரிவுகளுக்கு உட்பட்ட ஆயிரத்து 642 குடும்பங்களைச் சேர்ந்த, 7 ஆயிரத்து 31 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று காலி மாவட்டச் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன தெரிவித்துள்ளார்.
போப்பே பொத்தல பிரதேச செயலகப் பிரிவில், 20 வீடுகள் சேதமடைந்துள்ளன. கடந்த 24 மணித்தியாலத்தில் அங்கு 295 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. கடவத்சதர, போப்பே, பொத்தல, அக்மீமன, நியாகம, எல்பிட்டிய, நாகொட ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் வசிக்கும் மக்கள், சீரற்ற வானிலையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (சு-இ)

## வீட்டின் மீது மின்னல் தாக்கம்

சாவகச்சேரி, செப்.3
கச்சாய், புங்கடிப் பகுதியில் உள்ள வீடொன்றின் மீது மின்னல் தாக்கியதில் வீடு தீப்பற்றியுள்ளது. பெய்த கடும் மழையால் தீ பரவாது அணைந்தது என்று தெரிவிக்கப்பட்டது.
கடந்த 31ஆம் திகதி நள்ளிரவு கடும் காற்றுடனும், மின்னலுடனும் மழை பெய்தது. அப்போதே வீடொன்றின் மீது மின்னல் தாக்கம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-9)

### மன்னார் மாவட்டத்தில்

# பல கிராமங்கள் வெள்ளத்தில்!

மன்னார்,செப்.3
**மன்னார் மாவட்டத்தில் கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக, மாவட்டத்தில் தாழ் நில கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.**



சாந்திபுரம், ஜீவபுரம், ஜிம்றோன்நகர், எமில்நகர், எழுத்தூர் உள்ளிட்ட கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.
வெள்ளம் வடிந்து செல்லக் கூடிய விதமாக வடிகால் அமைப்புகள், ஒழுங்கான முறையில் அமைக்கப்படாத காரணத்தால் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது.
மழை தொடர்ந்து பெய்யும் பட்சத்தில் மக்கள் இடம் பெயர வேண்டிய சூழல் ஏற்படும். எனவே மன்னார் நகர சபை மற்றும் பிரதேச செயலகம் உடனடியாக மாற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (சு-56)

## மீனவர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு,செப்.3
காங்கேசன்துறை முதல் கொழும்பு வரை மற்றும் மன்னார் வழியாக ஆழமான மற்றும் ஆழமற்ற கடற்பகுதிகளில் காற்று, மணிக்கு 70 தொடக்கம் 80 கிலோ மீற்றர் வேகத்தில் வீசக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
காலி தொடக்கம் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஊடாக திருகோணமலை வரையிலான கடலோரப் பகுதிகளிலும் காற்று வீசக்கூடும்.
நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடலோரப் பகுதிகளில் மணிக்கு 50 தொடக்கம் 55 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசுமெனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இதன் காரணமாக கடற்றொழிலில் ஈடுபடுவோர் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (சு-இ)

## அனர்த்தத்தை எதிர்கொள்ளத் தயார்

கொழும்பு,செப்.3
நாட்டின் பல பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக ஏற்படும் அனர்த்த நிலைமைகளை எதிர்கொள்ள, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.
அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ள ஒன்பது மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க மூன்று மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
இது மாவட்ட செயலாளர்கள் ஊடாக வழங்கப்பட்டுள்ளது என்று உள்நாட்டு அலுவல்கள், பாதுகாப்பு, அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளர் கிறிஸ்டி லால் பிரனாந்து தெரிவித்துள்ளார்.
இதேவேளை அனர்த்தம் சம்பந்தமாக பொது மக்கள் தகவல்களை அறிவிப்பதற்கு 117 என்ற விசேட தொலைபேசி இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
அனர்த்தம் இடம்பெறுமாயின் அது குறித்து விரைவாக நடவடிக்கை எடுப்பதற்கு, பிரதேச செயலக மட்டத்தில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார். (சு-இ)

## யாழ்ப்பாணத்தில் பாதிப்பில்லை

யாழ்ப்பாணம்,செப்.3
தற்போதுள்ள காலநிலை மாற்றத்தால், யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்துக்குள் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்று யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு உதவிப் பணிப்பாளர் என்.சூரியராஜ் தெரிவித்தார்.
வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலை காரணமாக, வானிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் கணிசமான அளவு மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது, யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரை எந்தவித அனர்த்தங்களோ, சேதங்களோ இடம்பெறவில்லை.
அடுத்து வரும் 18 மணித்தியாலங்களுக்கு இந்த நிலைமை தொடர்ச்சியாக நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மக்கள் அவதானத்துடன் இருப்பதுடன், கடற்றொழிலில் ஈடுபடுவோர் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சு-111,20)

## மின்னல் தாக்கம்: 27 பசுக்கள் இறப்பு

மட்டக்களப்பு, செப்.3 மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பிரதேசத்திற்குட்பட்ட மாவடியோடைப் பகுதியில் இடம்பெற்ற திடீர் மின்னல் தாக்கத்தினால் பண்ணையாளர் ஒருவரின் 27 பசுக்கள் இறந்துள்ளன.



இடியுடன் கூடிய மழை பெய்த நிலையில் ஏற்பட்ட மின்னல் தாக்கத்தினாலேயே இந்தப் பசுக்கள் இறந்துள்ளன. இதனால் சுமார் 20 இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் கிடைத்த வருமானத்தைக் கொண்டே எமது பிள்ளைகளின் கல்வியை முன்கொண்டு சென்றோம். தற்போது இந்த இழப்பினால் ஒட்டுமொத்த வருமானத்தையும் இழந்து நிற்கின்றோம். பாதிக்கப்பட்டுள்ள எமக்கு அரசாங்கம் ஊக்குவிப்பையாவது வழங்குமானால் எம்மால் இந்தத் தொழிலை தொடர்ந்து செய்யக்கூடியதாக இருக்கும் என பண்ணை உரிமையாளர் தெரிவித்துள்ளார்.
இதேவேளை, இறந்த பசுக்களை பெக்கோ இயந்திரத்தைப் பயன்படுத்தி கடற்படையினர் புதைத்தனர். (ந-150)

## 4 மாவட்டங்களில் மண்சரிவு அபாயம்

கொழும்பு,செப்.3
நாட்டின் நான்கு மாவட்டங்களுக்கு முதலாம் கட்டமாக மஞ்சள் நிற மண்சரிவு எச்சரிக்கை, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தால் விடுக்கப்பட்டுள்ளது.
காலி மாவட்டத்தின் நியாகம பிரதேச செயலாளர் பிரிவுக்கும், இரத்தினபுரி மாவட்டத்தின் எஹெலியகொட பிரதேச செயலாளர் பிரிவுக்கும், கேகாலை மாவட்டத்தின் தெஹியோவிட்ட மற்றும் யட்டியாந்தோட்டை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், களுத்துறை மாவட்டத்தின் மத்துகம, வலல்லாவிட்ட, இங்கிரிய, அகலவத்த, ஹொரணை மற்றும் புளத்சிங்ஹள ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
அதேவேளை நாட்டின் 2 மாவட்டங்களுக்கு இரண்டாம் கட்ட மண்சரிவு எச்சரிக்கையான செம்மஞ்சள் நிற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
காலி மாவட்டத்தின் எல்பிட்டிய, நாகொட மற்றும் பத்தேகம பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், களுத்துறை மாவட்டத்தின் பாலிந்தநுவர பிரதேச செயலாளர் பிரிவுக்கும் செம்மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (சு-இ)

# மருத்துவர்களுக்கு ஒரு நடைமுறை எங்களுக்கு வேறு நடைமுறையா?

## சீறி எழுந்தனர் சிற்றூழியர்கள்

யாழ்ப்பாணம், செப். 3

வடமாகாண நிர்வாகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அநீதியான ஓர வஞ்சனையான கட்டுப்பாட்டுக்கு எதிராக வடக்கிலுள்ள மருத்துவமனைகளின் சிற்றூழியர்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். சில மருத்துவமனைகளின் சிற்றூழியர்கள் நேற்றுப் போராட்டத்தை ஆரம்பித்துள்ள போதிலும், எதிர்வரும் நாள்களில் இது விரிவடையும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வருகை நேரத்தைப் பதிவு செய்வதற்கு கைரேகை அடையாளமிடும் நடைமுறைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கைரேகை அடையாளமிடுதலிற்கு எதிராக ஏன் போராட வேண்டும்?, அது ஒரு நிர்வாக நடைமுறைதானே என்று மேலோட்டமாகத் தோன்றலாம். ஆனால், இதற்கு பின்னால் மருத்துவத்துறை மாபியா ஒளிந்துள்ளது என்று குற்றம் சுமத்தப்படுகின்றது. அந்த மாபியாத்தனத்துடனேயே சிற்றூழி யர்கள் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

**ஏன் போராட்டம்?**

வடக்கு முழுவதிலுமுள்ள அரச மருத்துவமனைகளில் பணிபுரியும் சிற்றூழியர்கள் அனைவரும் கடமைக்கு வரும் போதும், போகும் போதும் கைரேகை அடையாளமிட வேண்டுமென அண்மையில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஒரு சுற்றறிக்கை வெளியிட்டிருந்தார். இந்தச் சுற்றறிக்கை மருத்துவத்துறை மாபியாவை வளர்க்க துணை போகும் செயல். ஏனெனில், இந்தச் சுற்றறிக்கையின்படி மருத்துவர்கள், தாதியர்கள், ஆய்வுகூட பரிசோதகர்கள் கையொப்பமிடத் தேவையில்லையென குறிப்பிடப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் மருத்துவர்களையும் கையொப்பமிட வைக்கலாமா என்று வடக்கு மாகாண நிர்வாகம் முயன்று பார்த்தது. மருத்துவர்கள் அதற்கு கண்டிப்பாக மறுத்து விட்டனர்.

இதையடுத்து, மருத்துவர்கள் தவிர்ந்த மற்றைய அனைத்து தரப்பினரையும் கையொப்பமிட வைக்கலாமென வடக்கு நிர்வாகம் முயன்றது. இதற்கு தாதியர்கள் உடன்படவில்லை. மருத்துவர்கள் கையொப்பமிடாத பட்சத்தில் நாமும் கையொப்பமிடமாட்டோம், மருத்துவர்கள் கையொப்பமிட்டால் நாமும் கையொப்பமிடுவோம் என்றார்கள். மருத்துவர்களுடன், தாதியர்களுக்கும் விதிவிலக்களிக்க வடக்கு நிர்வாகம் முடிவெடுத்தது. இதன்போது, ஆய்வு கூட பரிசோதர்களும் போர்க்கொடி தூக்கினர். மருத்துவர்கள், தாதியர் கையொப்பமிடாத பட்சத்தில் நாமும் கையொப்பமிட மாட்டோம் என்றார்கள். அவர்களுக்கும் வடக்கு நிர்வாகம் விதி விலக்களித்தது. எஞ்சியது சிற்றூழியர்கள். நிர்வாகத்தை நவீனப்படுத்தும் முயற்சியை சிற்றூழியர்களிடம் ஆரம்பித்துள்ளது வடக்கு நிர்வாகம்.

**மேலதிக நேர கொடுப்பனவு**

கைரேகை அடையாளமிடல் நடவடிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு காரணம் மேலதிக பண விரயத்தை கட்டுப்படுத்துவது என்று வடக்கு நிர்வாகம் சொல்கிறது. சிற்றூழியர்கள் பலர், கடமை நேரத்தில் சமுகமளிக்காமல் மேலதிக நேரத்தில் கடமையாற்றி, மேலதிக நேர கொடுப்பனவை பெறுகிறார்கள் என்பது குற்றச்சாட்டு. அதை மறுக்க முடியாது. அதில் உண்மையுள்ளது. ஒரு பகுதி சிற்றூழியர்கள் அப்படி நடக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால், அதைவிட பேருண்மை மருத்துவர்களில் ஒரு பகுதியினரும் அப்படி நடக்கிறார்கள் என்பது. வடக்கு நிர்வாக தகவல்களின்படி, இப்படி சிற்றூழியர்களுக்குச் செலவாகும் மேலதிக நேரக் கொடுப்பனவை விட, பல மடங்கு அதிக மேலதிக நேர கொடுப்பனவு மருத்துவர்களுக்காகச் செலவாகிறது. பண விரயத்தை தடுக்க வேண்டுமெனில், முதலில் மருத்துவர்களுக்காக செலவாகும் மேலதிக நேர கொடுப்பனவை கட்டுப்படுத்த வேண்டும். மில்லியன் கணக்கில் மருத்துவர்களுக்கு செலவாகும் மேலதிக நேர கொடுப்பனவை கட்டுப்படுத்தாமல், இலட்சங்களில் செலவாகும் சிற்றூ ழியர்களின் கொடுப்பனவை கட்டுப்படுத்துவதன் மூலம், நிதி வீண் விரயத்தை கட்டுப்படுத்தலாமென வடக்கு நிர்வாகம் போடும் கணக்கு விசித்திரமானது.

**மருத்துவ மாபியா**

மருத்துவத்துறை மாபியாத்தனம் பற்றி புதிதாக எதுவும் சொல்லத் தேவையில்லை. குறிப்பாக வடக்கில் யாழ்ப்பாணத்தில் அது மோசமான கட்டத்தை எட்டியுள்ளது. அரச மருத்துவமனைகளில் வெளிநோயாளர் பிரிவுக்குச் சென்றால் சத்திரசிகிச்சைக்குச் சென்றால் தாமதமாகும், தனியார் மருத்துவமனைகளில் மருத்துவரைச் சந்தித்தாலே விரைவான சத்திரசிகிச்சை சாத்தியமாகுமென்ற நிலை. இது இன்றும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையை மையப்படுத்தி எழுந்துள்ள மருத்துவ மாபியா கலாசாரத்தின் ஓர் அங்கம். மருத்துவ மாபியாக்களுடன் மோத முடியாமல், சிற்றூழியர்களுக்கு மட்டும் வடக்கு நிர்வாகம் புதிய கட்டுப்பாட்டை விதித்துள்ளது.

**முட்டுக் கொடுக்கும் சங்கம்**

மருத்துவர்கள் எந்தவொரு மருத்துவமனையிலும் தமது வருகையை எந்த வடிவத்திலும் பதிவுசெய்யத் தேவையில்லை. அவர்களே நிரப்பும் குறிப்பேடு (டயறி) மருத்துவமனை பொறுப்பாளரால் கையெழுத்திட்டு ஒப்புதல் வழங்கப்படும். வடக்கில் பல மருத்துவமனைகளுக்கு மக்கள் சென்றால் மருத்துவர்கள் இல்லை என்பதே அங்கிருப்பவர்களால் கூறப்படும் பதிலாகும். ஆனால் அந்தத் தினங்களில் மருத்துவமனைக்குச் சென்று விடுதிகளைப் பார்வையிட்டோம், நோயாளர்களைப் பார்வையிட்டோம் என்று குறிப்பேடு எழுதி தமது கொடுப்பனவுகளை மருத்துவர்கள் தவறாது பெற்றுக் கொள்கின்றனர். இவ்வாறான மாபியா நடக்கின்றது என்பதை வடக்கு மாகாண சுகாதாரத்துறையில் உள்ள நிர்வாக சேவை தரத்தில் உள்ளவர்கள் கண்டறிந்திருந்தாலும், மருத்துவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாத கையறு நிலையிலேயே அவர்கள் உள்ளனர். நிர்வாக சேவையிலுள்ள மருத்துவர்கள் இந்த மோசடிக்கு உடந்தையாகச் செயற்படுவதும், மருத்துவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கச் சென்றால் மருத்துவர்களுக்கான சங்கம் ஊடாக அந்த அதிகாரிகளை இடமாற்றம் செய்வதும் என்ற மாபியா செயற்பாடு காரணமாக இவற்றைக் கண்டும் காணாமலும் நிர்வாக சேவைத் தரத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இருக்கின்றனர். (ஓ.5)



## சுகாதார உதவியாளர்கள் மன்னாரில் போராட்டம்

மன்னார், செப். 3

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் கடமையாற்றும் சுகாதார உதவியாளர்கள் நேற்று அடையாளப் பணி புறக்கணிப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

அரசாங்கத்தின் தாபன விதிக் கோவையை ஒழுங்கான முறையில் அனைத்துச் சுகாதார உத்தியோகத்தர்களுக்கும் சமனான முறையில் பின்பற்றப்பட வேண்டும் எனவும், சுகாதார உதவியாளர்களை ஒருதலைப்பட்சமாக நடத்துவதை வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம் நிறுத்த வேண்டும் எனவும் கோரியே அவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். காலை 8 மணி தொடக்கம் 11 மணி வரை அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வட மாகாண சுகாதார திணைக்களத்தால் அண்மையில் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தின் அடிப்படையில் சுகாதார உதவியாளர்கள் மாத்திரம் உள்வரவு மற்றும் வெளியேறும் போது விரல் அடையாளங்கள் பதிவு செய்ய வேண்டும் எனவும் அவ்வாறு செய்யா விட்டால் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் வழங்கப்படமாட்டாது எனவும் அறிவுறுத்தப்பட்டிருந்தது. இதனை அடுத்து அவர்கள் நேற்று போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். வடமாகாண சுகாதாரப் பணியாளர்களுக்கு நீதியான முடிவைப் பெற்று தராத பட்சத்தில் தாய்ச் சங்கத்துடன் இணைந்து நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளோம் என போராட்டக் காரர்கள் தெரிவித்தனர். குறித்த பிரச்சினை தொடர்பாக உரிய முறையில் பேசி தொடர்சியாக போராட்டம் இடம் பெறாத வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பனிப்பாளர் மருத்துவர் ரி. வினோதன் தெரிவித்தார். (ஐ-56)

## சிற்றூழியர்கள் ஆர்ப்பாட்டம்!

வவுனியா, செப்.3

வவுனியா பொது மருத்துவமனை சிற்றூழியர்களால் நேற்று ஆர்ப்பாட்டமும், பணிப் புறக்கணிப்பும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டம் மருத்துவமனை வளாகத்தில் காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணிவரை நடைபெற்றது. தங்களது பணி நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் கைவிரல் அடையாள நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது. அதைத் தவிர்த்து முன்னரைப் போன்று கையொப்பம் இடும் நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். எமது கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் போராட்டம் தொடரும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

அரச சட்டங்கள் அனைவருக்கும் சமன், எமக்கு மட்டும் ஏன் இந்த அநீதி,மன அமைதியுடன் பணிசெய்ய விடு போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (எ-110)



# என்ன வளம் இல்லை முல்லையில்?

முல்லைக்கீதன்

தேவையான உதவிகளும், வசதிகளும் கிடைத்துவிட்டால் எங்களூர் விவசாயிகள் , வளமற்ற மண்ணையும் செழிக்கச் செய்துவிடும் ஆற்றல் கொண்டவர்கள். அப்படிப்பட்டவர்கள் ஏற்கனவே வளமான மண் நிறைந்து கிடக்கும் முல்லை மண்ணை மட்டும் தரிசாக விடுவார்களா என்ன? முல்லைத்தீவில் விவசாயிகள் என்னென்ன அற்புதங்களையெல்லாம் நிகழ்த்தியுள்ளனர் என்பதை வெளியுலகுக்கு சொல்லும் வகையில் அண்மையில் அங்கு நடந்த வயல்விழாக் கண்காட்சி அமைந்தது.

முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களம் திருந்திய தொழில் நுட்பத்துடனான பேண்தகு விவசாயத்திலான வயல் விழாக் கண்காட்சியை இம்முறை இருநாட்களாக நடத்தி, சுமார் 2000 பேர் வரைபயன்பெறச் செய்துள்ளது.

இந்தக் கண்காட்சி கடந்த மாதம் 27 ஆம் திகதி வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் பி.உகநாதன் தலைமையில் ஆரம்பமானது. இந்த நிகழ்வில் வடமாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் வீ.பிறேம்குமார் உள்ளிட்ட பிரதிவிவசாய பணிப்பாளர்கள், உதவி விவசாயப் பணிப்பாளர்கள் உள்ளிட்டவர்கள் விருந்தினராக கலந்துகொண்டு மெருகூட்டினர்.





இரண்டாம் நாள் நிகழ்வில் வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் சிவபாலசுந்தரன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு வயல்விழாக் கண்காட்சியைத் தொடக்கிவைத்தார். விவசாய தொழில் நுட்ப வயல் விழா கண்காட்சியினை முன்னிட்டு பாடசாலைகளில் நடைபெற்ற போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கு பயன்தரு மரக்கன்றுகளையும் சிறப்பு விருந்தினர் வழங்கி வைத்தார்.

நாட்டின் பொருளாதாரத்தில் செல்வாக்குச் செலுத்தும் மாவட்டங்களில் முல்லைத்தீவு மாவட்டமும் ஒன்று. கடல் வளமும் நிலவளமும் கொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து அதிக அளவான கடல் உணவுகள் மற்றும் நெல், நிலக்கடலை என்பவை ஆண்டு தோறும் வெளிமாவட்டங்களுக்கு ஏற்றுமதியாகிக் கொண்டிருக்கின்றன.

அதிக அளவில் பப்பாளி, பசன்புறுட், மரக்கறி வகைகளும் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன . ஆயினும் உரிய சந்தைவாய்ப்பு இல்லாத காரணத்தினால் இந்த மாவட்ட விவசாயிகள் பொருளாதார ரீதியாக நலிவுற்றவர்களாகவே காணப்படுகின்றார்கள்.

நவீனமயப்படுத்தல் ஊடாக விவசாயிகளை ஊக்குவித்து, அவர்களின் பொருளாதார நிலையை கட்டி வளர்க்கவேண்டியது அரசின் கடமையாகும். முல்லைத்தீவு மாவட்டத்தில் 200 க்கும் மேற்பட்ட குளங்கள் காணப்படுகின்றன . சரியான நீர் முகாமைத்துவத்தை மேற்கொண்டால் முல்லை மண் இன்னும் செழிப்புற வாய்ப்புண்டு.

நவீனமயப்படுத்தப்பட்ட தொழில் நுட்பங்களை விவசாயச் செய்கையில் புகுத்துவதன் ஊடாக விவசாயிகளின் உற்பத்தி திறறை மேலும் விருத்தி செய்யமுடியும். ஈரவலயப் பிரதேசங்களில் செய்கை பண்ணப்படும் கோவா, கரட், கொத்தமல்லி, மிளகு, போன்றவற்றையும் உலர்வலய மாவட்டமான முல்லைத்தீவிலே பயிரிட முடியும் என்பதை இந்தவயல் விழாவில் விவசாயப் போதனாசிரியர்கள் நிரூபித்துள்ளனர்.

வீட்டில் இருக்கும் பெண்களால் மேற்கொள்ளப்படக்கூடிய காளன்செய்கை, காடை வளர்ப்பு என்பவற்றின் ஊடாகவும் விவசாயிகள் அதிக அளவான நன்மையை அடையலாம் என்பதையும் கண்காட்சியாளர்கள் சிறப்பாகத் தெளிவுபடுத்தினர். அதே போன்று முயல், கோழி, மாடு, ஆடு, போன்ற கால நடைகளுக்கு இயற்கை வழித் தீவனங்களைத் தயாரிக்கும் முறைகளும், அவற்றின் ஊட்டச்சத்து செரிமானங்களின் அளவுகளும் குறித்து கண்காட்சியில் எடுத்துரைக்கப்பட்டன.

பல உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் வாய்ப்பும் இதன்போது வழங்கப்பட்டது. குறிப்பாக பூங்கன்றுகள், காடை முட்டைகள், பழமரக்கன்றுகள், மஞ்சள், இஞ்சிக் கன்றுகள், என்பவை கண்காட்சியில் அதிகளவில் விற்பனை யாகியுள்ளன. குறிப்பாக பாடசாலை மாணவர்கள் தங்கள் பாடசாலைகளில் காணமுடியாத விவசாயம், விஞ்ஞான பாடங்களுக்கான செயன்முறைகளை நேரடியாகப் பார்வையிட்டதால், அவர்களின் பிரயோக அறிவு இன்னும் மெருகேறும் சந்தர்ப்பமும் இந்தக் கண்காட்சி மூலம் வாய்த்தது.

**சிறு தோட்டங்கள் சிறு முயற்சிகள் ஊடாக எங்கள் பொருளாதாரத்தை நாங்களே பலப்படுத்தவேண்டிய காலகட்டத்தில் நிற்கின்றோம். நீர்வளம் உண்டு, நிலவளம் உண்டு. அவற்றை சரியான முறையில் பயன்படுத்தி ஏனைய நாடுகளில் தங்கி இராமல் நிறைவான பொருளாதாரத்துடன் தலை நிமிர்த்துவோம்.**

நிலக்கடலையைப் பிரிக்கும் இயந்திரம், புல்லுவெட்டும் இயந்திரங்கள் , உழவு இயந்திரங்கள் போன்ற இறக்குமதி இயந்திரங்களோடு, உள்ளூர் விவசாயிகளின் தயாரிப்பில் உருவான புல்செதுக்கும் இயந்திரம் , மண்அணைக்கும் இயந்திரம் என்பன பார்ப்போரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியதுடன், முல்லைத்தீவு விவசாயிகளின் தொழினுட்பத் திறனையும் பறைசாற்றின.

சிறு தோட்டங்கள், சிறு முயற்சிகள் ஊடாக எங்கள் பொருளாதாரத்தை நாங்களே பலப்படுத்தவேண்டிய காலகட்டத்தில் நிற்கின்றோம். நீர்வளம் உண்டு, நிலவளம் உண்டு. அவற்றை சரியான முறையில் பயன்படுத்தி ஒவ்வொரு குடும்பமும் தன்னிறைவான பொருளாதார உற்பத்திற்கு வழிவகுக்குமானால் எங்கள் நாடு ஏனைய நாடுகளில் தங்கியிராமல் நிறைவான பொருளாதாரத்துடன் தலை நிமிரும் என்பதையே இந்த வயல்விழாக் கண்காட்சி மீண்டுமொருமுறை எடுத்தியம்பியுள்ளது.







## இன்றைய நாள்

**மேடம்:** இனிமையான நாள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நிகழ்ச்சி விஷயமான முயற்சிகள் வெற்றிப் பாதையை நோக்கிச் செல்லும். பெண்களுக்கு இழந்த பொருள்கள் கிடைக்கும்.

**இடபம்:** புதிய முயற்சி எடுக்கும் நாள். வியாபாரத்தில் ஓரளவு நன்மை உண்டு. உடன்பிறப்புகள் வழியில் ஏற்பட்ட கவலைகள் மாறும் வழக்குகளில் திசை திருப்பம் ஏற்படும்.

**மிதுனம்:** அதிர்ஷ்டமான நாள். குடும்பத்தினரின் எண்ணங்களுக்கு மதிப்பளிப்பீர்கள். முக்கியப் பிரமுகரின் நட்புக் கிடைக்கும். சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்பீர்கள். வியாபாரத்தில் லாபம் உண்டாகும்.

**கடகம்:** முன்னெச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய நாள். எதையும் திட்டமிட்ட வகையில் செய்ய இயலாது. கணவரின் உடல் நலனில் கவனம் தேவை. திடீர் பகை உருவாகலாம்.

**சிம்மம்:** கவலைகள் முடிவுக்கு வரும் நாள். குழந்தைகளால் மகிழ்ச்சி ஏற்படும். மேலதிகாரி பணியின் நுணுக்கங்களை கற்றுத் தருவார் என்று எதிர்பார்க்க வேண்டாம்.

**கன்னி:** நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள். தாழ்வு மனப்பான்மை வந்து செல்லும். கனவுகள் நனவாகும் நாள். சொத்துக்கள் வாங்குவது பற்றி திட்டங்களைத் தீட்டுவீர்கள்.

**துலாம்:** பிள்ளைகளின் திருமணம் குறித்து யோசிப்பீர்கள். செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. மன நிறைவு ஏற்படும் நாள். வியாபாரத்தில் புதிய ஒப்பந்தம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** குழந்தைகளால் மகிழ்ச்சி ஏற்படும். நண்பர்களிடம் எண்ணங்களைப் பகிர்வீர்கள். நம்பிச் செய்தவை நல்லவிதமாக நடைபெறும் நாள். வெளிவட்டாரப் நட்பு விரிவடையும்.

**தனுசு:** உழைப்பால் உயரும் நாள். எதிர்பார்த்த இடத்தில் இருந்து பணம் கைக்கு வந்து சேரும். வியாபாரத்தில் புது பங்குதாரரை இப்போதைக்குச் சேர்க்க வேண்டாம்.

**மகரம்:** திட்டமிட்ட பணிகள் நன்றாக நடைபெறும் நாள். வருமானம் போதுமானதாக இருக்கும். நட்பென்று நம்பியவர்களால ஏற்பட்ட தொல்லை அகலும்.

**கும்பம்:** நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்காது. வேற்று மொழி பேசுபவர்கள் நட்பாவர்கள்.

**மீனம்:** தன்னம்பிக்கையோடு பணி புரியும் நாள். பிரபலமானவர்களின் சந்திப்பு கிடைக்கும். தொழில் வளர்ச்சிக்குப் புதிய யுக்திகளைக் கையாளுவீர்கள்.

# கல்வித் தரத்தை மேம்படுத்த சிறந்த பொறிமுறை

## தமிழ் மக்கள் பேரவை நடவடிக்கை

**யாழ்ப்பாணம், செப். 3**

**கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கு 10 விடயங்களை அடையாளம் கண்டு அவற்றை முன்னெடுப்பதற்கு தமிழ் மக்கள் பேரவை நடவடிக்கை எடுத்து வருகின்றது. இந்த விடயத்தில் ஆர்வமுள்ள தரப்புக்களைத் தொடர்புகொள்ளுமாறு தமிழ் மக்கள் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.**

இது தொடர்பில் தமிழ் மக்கள் பேரவையால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஆசிரியர்களின் பெருமுயற்சியுடனும் பெற்றோர்களின் உழைப்பு, ஊக்குவிப்புகளுடனும் மாணவர்களின் அயராத முயற்சிகளினூடும் எம்மவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் பயனாக உருவாகிவரும் எமது இளம் தலைமுறையினரின் திறனையும் ஆளுமையையும் தமது குடும்பம், மொழி, கலை, கலாசாரம் மற்றும் நற்பண்புகள் என்பவற்றில் அவர்களுக்கு இருக்கும் பற்றுறுதியை மேம்படுத்துவதற்கு செய்யப்படவேண்டிய விடயங்கள் தொடர்பாக பலருடன் கலந்துரையாடல்களை தமிழ் மக்கள் பேரவை மேற்கொண்டு வருகின்றது. இதன் பயனாகச் செயற்படுத்தப்பட வேண்டிய பத்து விடயங்கள் அடையாளப் படுத்தப்பட்டிருக்கின்றன.

- மாணவர்களின் உண்மையான ஆர்வமும் திறனும் அடையாளப்படுத்தப்படல் தொடர்பாக பயிற்சியளித்தல்.
- மாணவர்களினுடைய கற்றல் சம்பந்தமான தெரிவுகளுக்கு முன்னுரிமை வழங்குவதும் கற்பித்தல் சம்பந்தமாக அவர்களின் அபிப்பிராயங்கள் உள்வாங்கப்படுவதற்கான பொறிமுறைகளை மேம்படுத்துவதற்கும் பயிற்சியளித்தல்.
- நல்ல பழக்கங்களையும் செயல்களையும் மாணவர்கள் பழகுவதற்கும் செய்வதற்கும் ஊக்கப்படுத்தும் செயற்பாடுகளை பொறிமுறைகளுடன் நடைமுறைப்படுத்தல்.
- மாணவர்களுக்குக் கற்றல் செயற்பாடுகளில் ஆர்வமூட்டும் நடைமுறைகளை அறிமுகம் செய்தலும் தன்னார்வ கற்றல் செயற்பாடுகளை ஊக்குவித்தலும்.
- குடும்பம், ஆசிரியர்கள், மொழி, கலை, கலாசாரம், தன்னிறைவு என்பவற்றில் மாணவர்களுக்கு இருக்கும் மதிப்பையும் பற்றுறுதியையும் மேம்படுத்துவதற்கான திட்டங்களை அறிமுகம் செய்தல்.
- சவால்களை எதிர்கொள்ளும் திறனையும், வெற்றி நோக்கி முயற்சிக்கும் மனப்பாங்கையும், தோல்விகளைத் தாங்கிக் கொள்ளும் மனப்பக்குவத்தையும் வளர்க்க முயற்சி எடுத்தல். நட்புறவு, சகோதரத்துவம், நம்பிக்கை உணர்வுகளை வளர்த்து பிறரின் மனம் நோகாத சிநேகபூர்வ தொடர்பாடல்களுக்கான பயிற்சி வழங்குதல்.
- நேரத்தையும் வாழ்க்கையையும் திட்டமிடுவதற்கான பயிற்சியளித்தல்.
- நல்ல அடிப்படை குணாதிசயங்களை கற்கும், கற்பிக்கும் உபாயங்களை அறிமுகப்படுத்தல்.
- மற்றவர்களின் உரிமைகளையும் மன உணர்வுகளையும் புரிந்துகொள்ள பயிற்சியளித்தல்.

இவ்வாறாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் பல விடயங்களை யும் நடைமுறைப்படுத்தி முன்னெடுக்கப் பல்வேறு தரப்பினருடனும் இணைந்து பணியாற்றும் முயற்சிகளை தமிழ் மக்கள் பேரவை ஆரம்பித்திருக்கிறது. இதற்கான தொடர் திட்டமிடல் செயலமர்வுகளில் கலந்துகொள்ள விரும்பும் அமைப்புகள், கல்வியாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் tpcofficialmail@gmail.com என்ற மின்னஞ்சல் ஊடாக தமிழ் மக்கள் பேரவையைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்- என்றுள்ளது. (ஒ.5)

## மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாளை வெள்ளி காலை 9.30 மணியிலிருந்து பிற்பகல் 1. மணிவரை **கிளிநொச்சி மாவட்டத்தில்** பரந்தன், உமையாள்புரம், ஆனையிறவு, ஆனையிறவு உப்பளம் ஆகிய இடங்களிலும், காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **வவுனியா மாவட்டத்தில்** பம்பைமடுவிலிருந்து குருக்கள் புதுக்குளம் வரை, பூவரசங் குளத்திலிருந்து செங்கற்படை, வேளாங்குளம் கடற்படை முகாம், பம்பைமடு பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழகம், ஆண்டியப்புளியங்குளம், நித்தியநகர் ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.

# சஜித் தலைமையில் புதிய கூட்டணி

கொழும்பு, செப்.3

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் 'ஐக்கிய மக்கள் கூட்டணி' எனும் பெயரில் புதியதொரு அரசியல் கூட்டணி இன்னும் இரு வாரங்களில் உதயமாகவுள்ளது.

அதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன எனவும் புதிய சில கட்சிகளும், அமைப்புகளும் கூட்டணியில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளன எனவும் தெரியவருகின்றது.

இந்தக் கூட்டணிக்கு தலைமைத்துவ சபையொன்று உருவாக்கப்பட்டு அதன் தலைவராக சஜித் பிரேமதாசவும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் தலைமைத்துவ சபை உறுப்பினர்களாகவும் செயற்படவுள்ளனர் எனவும் தெரியவருகின்றது. புதிய கூட்டணியைப் பதிவுசெய்யும் நடவடிக்கையும் இடம்பெறவுள்ளது.

**சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய உட்பட மேலும் சில கட்சிகள் கூட்டணி வைத்துள்ளன. இவை புதிய கூட்டணிக்கு உத்தியோகப்பூர்வமாக உள்வாங்கப்படவுள்ளன.** (எ-44)

# வலிந்து காணாமலாக்கப்பட்டோர் அதிகம் உள்ள நாடாக இலங்கையும்!

## சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கான மக்கள் அமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 3

**உலகிலேயே அதிகளவான வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் பதிவாகியுள்ள நாடுகளில் இலங்கையும் ஒன்றாக இருப்பதுடன், 1980ஆம் ஆண்டுகளிலிருந்து நாட்டில் நடைபெற்ற இனமோதல்களில் சுமார் 60 ஆயிரம் தொடக்கம் ஒரு லட்சம் பேர் வரையில் காணாமல் போயிருக்கிறார்கள் என்று இலங்கையில் சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கான மக்கள் அமைப்பு சுட்டிக்காட்டியிருக்கிறது.**

வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களுக்கான தமது ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தும் நோக்கில் இலங்கையில் சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கான மக்கள் அமைப்பு அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கிறது.

அதில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதாவது:

இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது அன்பிற்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை அறிந்துகொள்வதற்காக தொடர்ச்சியாகப் போராடிவரும் அவர்களது குடும்பத்தினருடனான எமது ஒருமைப்பாட்டை வெளிப்படுத்துகின்றோம். 2009ஆம் ஆண்டில் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட போரின்போது பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் போர் வலயத்திலிருந்து வெளியேறி, அரச படைகளிடம் சரணடைந்தனர். அவர்களது பாதுகாப்பை உறுதி செய்வதாக படையினரால் அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைவாக அவர்கள் சரணடைந்தனர். எனினும் தற்போது வரையில் அவர்களுக்கு என்ன நடந்தது என்ற விவரங்கள் வெளியாகவில்லை. காணாமல் போனோரின் குடும்பத்தினர் இவ் விவகாரம் தொடர்பிலும் போர்க்குற்றங்கள் குறித்தும் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்- என்றுள்ளது. (ஒ,5)




# ஆணைக்குழுவில் முன்னிலையானார் அஜித் ரோஹண

கொழும்பு, செப். 3

பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, அரசியல் பழிவாங்கல் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் முன்னிலையானார்.

பதவி விலக்கப்பட்டுள்ள மூத்த பிரதி பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்க செய்த முறைப்பாட்டில், பிரதிவாதியாக உதவி பொலிஸ் அதிகாரி கிங்ஸ்லி குணசேகரவும் சாட்சியாளராக அஜித் ரோஹணவும் பெயரிடப்பட்டுள்ளமையால், அவர் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கினார். (ஒ,வ,இ)





# அல்டயர் குடியிருப்பை பார்வையிட்டார் ஜனாதிபதி

கொழும்பு, செப்.3

கொழும்பில் சுமார் 2 ஏக்கர் காணியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் அல்டயர் குடியிருப்பு மற்றும் வணிகக் கட்டடத்தை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

பேர வாவியுடன் இணைந்ததாக இரண்டரை ஏக்கர் நிலப்பரப்பில் இந்த வணிகக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இந்தக் கட்டடத்தின் நிலமாடி 40,000 சதுர அடிகளைக் கொண்டதோடு, 404 அதி சொகுசு வீடுகளையும் உயர்தரமான கடைத் தொகுதிகளையும் கொண்டுள்ளது.

இரண்டு கோபுரங்களைக் கொண்ட அல்டயர் கட்டடத் தொகுதியின் ஒரு கோபுரத்தில் 68 மாடிகளும் அடுத்த கோபுரத்தில் 63 மாடிகளும் உள்ளன. முதலீட்டுச் சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள இந்தத் திட்டத்திற்கு 250 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடு செய்யப்பட்டுள்ளதோடு, நகர அபிவிருத்தி அதிகார சபை இதற்கான நிர்மாணப் பணிகளைக் கண்காணித்து வருகின்றது. இக் கட்டடத் தொகுதியின் சுமார் 98 வீதமான நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன. இந்த நிலையில், எஞ்சியுள்ள பணிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் அளவில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ப-இ)

# சுயாதீன ஆணைக்குழுக்களை இல்லாமல் செய்ய அரசு முயற்சி

## ஜோசப் ஸ்டாலின் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 3

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் மூலம் நிறுவப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களின் சிங்களவரல்லாத இரண்டு பிரதிநிதிகளை வெளியேற்றும் நோக்கத்துடன் அனைத்து சுயாதீன ஆணைக்குழுக்களையும் இல்லாது செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

47 உறுப்பினர்களைக் கொண்ட பத்து சுயாதீன ஆணைக்குழுக்களிலும் இரண்டு உறுப்பினர்களை மாத்திரமே அரசாங்கம் குறிவைக்கிறது என தேசிய தொழிற்சங்க முன்னணியின் இணை ஏற்பாட்டாளர் ஜோசப் ஸ்டாலின் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தொடர்ந்து இரண்டு அதிகாரிகள் தொடர்பில் கேள்வி எழுப்பி வருகிறார்.

அவர்கள் தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால் அவர்களை நீக்குவதற்கான அதிகாரம் அரசாங்கத்துக்கு காணப்படுகிறது. சுயாதீன ஆணைக்குழுக்களின் உறுப்பினர்கள் சுயாதீனமானவர்கள்.

அவர்கள் விரும்பியபடி செயற்பட முடியும். குறித்த இரண்டு பிரதிநிதிகளுக்காக அனைத்து ஆணைக்குழுக்களையும் ஒழிக்க வேண்டுமா? - என்றார். (ப-இ)

# கால் போத்தல் மது தடை: இந்த வாரம் இறுதி முடிவு

கொழும்பு, செப்.3


கால் போத்தல் மதுபானத்தைத் தடை செய்வது தொடர்பில் உற்பத்தியாளர்களைச் சந்தித்த பின்னர் இந்த வாரம் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று சுற்றாடல்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

பயன்படுத்தப்பட்டபின் மதுப் போத்தல்களை திரும்பப் பெற்றுக்கொள்வதற்கான பொறுப்பை உற்பத்தியாளர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கும் சந்தர்ப்பத்தில் கால் போத்தல் மதுபானத்தின் பயன்பாடு தடை செய்யப்படும்.

இதேவேளை சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் குறைப்பதற்கான நடவடிக்கையாக மதுபான பக்கெட்டுக்களை தடை செய்வதற்கான முடிவு ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். (ரு-இ)

# உதவி ஆசிரியர் 420 பேருக்கு நியமனம் வழங்க நடவடிக்கை

## இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் உறுதி



கொழும்பு, செப். 3

பயிற்சிகளை நிறைவு செய்துள்ள 420 உதவி ஆசிரியர்களின் நியமனம் தொடர்பில் ஓரிரு வாரங்களில் நடவடிக்கை எடுக்கப்படுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், தோட்ட, வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ.கமகேவுக்கு தமக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இத்தீர்மானம் எட்டப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ப-இ)



# பெரிய வெங்காயத்தின் விலை அதிகரிப்பு

கொழும்பு, செப்.3

சந்தையில் பெரிய வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளது. கடந்த சில நாள்களாக பெரிய வெங்காயத்தின் விலை வீழ்ச்சியடைந்திருந்த நிலையில், தற்போது பெரிய வெங்காயம் கிலோ ஒன்றின் விலை 105 ரூபாவாக அதிகரித்துள்ளது.

இதேவேளை, தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் கடந்த நாள்களில் பெரிய வெங்காயத்தின் விலை கிலோ ஒன்று 50 முதல் 55 வரையில் காணப்பட்டது. மாத்தளை, தம்புள்ளை, சிகிரிய மற்றும் நாஉல ஆகிய பகுதிகளிலிருந்தும் பெரிய வெங்காயம் சந்தையில் விற்பனைக்கு வருவதன் காரணமாக அதன் விலை அதிகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ரு-இ)

# வாடகை வீட்டிலிருப்பதை மறந்து நடக்க வேண்டாம்!

## சிறுபான்மையினருக்கு எச்சரிக்கின்றார் மேதானந்த தேரர்

கொழும்பு, செப்.3

**இலங்கையின் முதல் சுதேச குடிமக்களின் மொழி தமிழ் என்றும், வடக்கு, கிழக்கு தமிழர்களின் தாயகம் என்றும் விக்னேஸ்வரன் குறிப்பிடுவது அப்பட்டமான பொய். அதற்கான வரலாற்று சான்றுகள் எதுவும் இல்லை.**

இவ்வாறு கிழக்கு மாகாண தொல்பொருள் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரனின் கருத்துத் தொடர்பில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இனவாதத்தைத் தூண்டி நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி அரசின் அபிவிருத்தித் திட்டங்களை குழப்புவதற்காகவே பூர்வீகம் பற்றியும், மொழி தொடர்பாகவும் தற்போது பேசுகின்றனர். விக்னேஸ்வரனால் கூறப்பட்ட கருத்துகள் அப்பட்டமான பொய்யாகும். அவரின் இத்தகைய உரைகளால் தமிழ் மக்களுக்கு எந்தவொரு நன்மையும் கிடைக்கப்போவதில்லை. மாறாகப் பிரச்சினைகளே உருவாகும்.

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் எனவும், பூர்வீக மொழி தமிழ் எனவும் நிரூபிப்பதற்கான எந்தவொரு வரலாற்று சான்றுகளும் இல்லை. தமிழ்தான் முதலில் இலங்கையில் இருந்தமொழியெனில் அதில் சில பகுதிகளாவது சிங்கள மொழியுடன் பொருந்தியிருக்கும். இங்கு அவ்வாறு இல்லை. அதேபோல் தமிழ் மக்களுக்கு இலங்கையில் வாழும் உரிமை இருக்கின்றது. அவர்களும் எமது சகோதரர்களே. இங்கு வாழும் பெரும்பான்மையின மக்கள் அவர்களுக்கு அநீதி இழைப்பதில்லை. வாடகை வீட்டில் இருக்கும்போது, வீட்டு உரிமையாளருக்கு எவரும் குழப்பம் ஏற்படுத்தக்கூடாது என்பதுபோல இங்கு வாழும் ஏனைய இன மக்களும் பெரும்பான்மையின மக்களுக்கு குழப்பம் விளைவிக்கக் கூடாது - என்றார்.

**புதிய அரசமைப்பு**

இலங்கைக்கு பொருத்தமான விதத்திலேயே புதிய அரசமைப்பு இயற்றப்படவேண்டும். மேற்குலக சட்டதிட்டங்கள் எமக்கு தேவையில்லை- என்றார். (எ-44)

# ஐ.தே.க. தலைமைக்கு கடும் போட்டி

கொழும்பு, செப்.3

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பதவி கரு ஜயசூரியவுக்கு வழங்கப்பட்டால் அந்தப் போட்டியிலிருந்து விலகுவதற்கு ரவி கருணாநாயக்க, தயாகமகே, அர்ஜுன ரணதுங்க மற்றும் நவீன் திஸாநாயக்க ஆகியோர் தீர்மானித்துள்ளனர் என அறியமுடிகின்றது.

பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஏற்பட்ட படுதோல்வியின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து விலகுவதற்கு ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்தார்.

அதையடுத்து ஐ.தே.கவின் தலைவர் பதவிக்காக அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலரும் தமது பெயர்களை அந்தப் பதவிக்குப் பரிந்துரைத்துள்ளனர். ரவி கருணாநாயக்க, தயாமகே, நவீன்திஸாநாயக்க, அகில விராஜ் காரியவசம், வஜிர அபேவர்தன ஆகியோரின் பெயர்கள் பட்டியலிடப்பட்டன. அதன்பின்னர் அர்ஜுன ரணதுங்க மற்றும் ருவான் விஜே வர்தன ஆகியோரும் தலைமைப்பதவிக்கு போட்டியிட விரும்புகின்றோம் என்று அறிவித்தனர்.

ஆனால் தனது உறவினரான ருவான் விஜேவர்தனவுக்கு தலைமைப்பதவியை வழங்கும் வகையிலான காய்நகர்த்தல்களை ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டார்.

அதற்குக் கட்சிக்குள் எதிர்ப்புகள் கிளம்பின. இந்தநிலையில் கரு ஜயசூரிய தலைமைப்பதவியை ஏற்க தயார் என்ற அறிவிப்பை விடுத்தார். ஆனால் கருவை ஓரங்கட்டும் விதத்திலான அறிவிப்புகளை ரணில் விக்கிரமசிங்க விடுத்தார். எனினும், ரவி, நவீன், தயாகமகே, அர்ஜுன போன்றவர்கள் கருவுக்கு ஆதரவாக குரல் கொடுத்துள்ளனர். இதனால் ஐ.தே.கவுக்குள் மீண்டும் குழப்பம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு பரபரப்பான சூழ்நிலைக்கு மத்தியில் அக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நாளைமறுதினம் சிறி கொத்தவில் கூடவுள்ளது. (எ-44)

# மணல் ஏற்றிய சாரதி கைது

கொடிகாமம்,செப்.3

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த வாகன சாரதியை கைதுசெய்துள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

மண்டைதீவுப் பகுதியில் வைத்து நேற்றுக் காலை இவர் கைதுசெய்யப்பட்டார்.

காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சந்தேகத்துக்கிடமான முறையில் வந்த ஹன்ரர் வாகனத்தை மறித்து சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றி வந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து வாகனச் சாரதி கைது செய்யப்பட்டுடன் சந்தேகநபரை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

# நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்த பொறுப்புடன் செயலாற்ற வேண்டும்

## நாட்டு மக்களிடம் கரு வேண்டுகோள்

கொழும்பு, செப்.3

நாட்டு மக்கள் தத்தமது சுய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதன் ஊடாக, நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்தும் வகையில் அனைவரும் பொறுப்புடன் செயலாற்ற வேண்டும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளதாவது, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை கடந்த ஞாயிற்றுக்கிழமை 3000 தை எட்டியுள்ள நிலையில், உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது, அதனைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டை நாம் சிறப்பாகக் கையாண்டிருக்கின்றோம்.தற்போது நாட்டில் அனைவரும் வழமை போன்று தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் நிலையில், பொறுப்புவாய்ந்த பிரஜைகள் என்ற வகையில் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு முன்னுரிமை வழங்கி செயலாற்ற வேண்டும். ஒவ்வொரு தனிநபரும் பாதுகாப்பாக இருந்தால் ஒட்டுமொத்த நாடும் பாதுகாப்பாக இருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தனது மற்றொரு பதிவில் இலங்கை மிகவும் அழகான நாடு என்று குறிப்பிட்டிருக்கும் அவர், நாட்டில் சுற்றுச் சூழல் தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் போது, அவை சூழலின் பாதுகாப்பை முன் நிறுத்தியதாக அமையவேண்டும். சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான திட்டங்கள் தொடர்பில் வெளியிடப்படும் அறிக்கைகளால் மக்கள் அதிருப்தியடைந்திருக்கிறார்கள் என்றும் சுட்டிக்காட்டியிருக்கிறார். (ந-இ)



மானிப்பாய் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் வி.தர்மலிங்கத்தின் 35 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு நேற்று புதன்கிழமை நடைபெற்றது. சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் அமைந்துள்ள அமரர் தர்மலிங்கத்தின் திருவுருவ சிலைக்கு மலர்மாலை அணிவித்து நினைவு கூரப்பட்டது. (ஐ)



# தர்மலிங்கத்தின் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.3

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கத்தின் 35ஆம் ஆண்டு நினைவுதினம் யாழ்ப்பாணம் தாவடி பகுதியில் உள்ள அவரது நினைவிடத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

தர்மலிங்கத்தின் மகனும், நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தலைமையில் நினைவு தின நிகழ்வுகள் நடைபெற்றன.

தர்மலிங்கத்தின் நினைவிடத்தில் மலர் மாலை அணிவித்து,மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் சிறீசற்குணராஜா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-20)

# 13,19ஐச் சேர்த்து 20 வர வேண்டும்

## டிலான் பெரேரா எம்.பி. தெரிவிப்பு



பதுளை, செப்.3

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தில் சில நல்ல விடயங்கள் உள்ளன. புதிய அரசமைப்பிலும் அவை பாதுகாக்கப்படவேண்டும் என்று பொதுஜன பெரமுனவின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டத்திலுள்ள குறைகளை நிவர்த்தி செய்வதற்காக 20ஆவது சட்ட மூலம் கொண்டு வரப்படும் என உறுதியளிக்கப்பட்டது. அந்த உறுதிமொழி நிறை வேறப்போகின்றது. 19 இல் சில நல்ல விடயங்கள் உள்ளன. அவை பாதுகாக்கப்படவேண்டும். அதேபோல் 13ஆவது சட்டத்திலும் நல்ல விடயங்கள் உள்ளன. எனவே, புதிய அரசமைப்பை இயற்றும்போது மேற்படி சரத்துகளில் உள்ள நல்ல விடயங்களை உள்வாங்கவேண்டும். அவ்வாறு உள்வாங்கி புதிய அரசமைப்பை உருவாக்கினால்தான் அது சிறப்பாக இருக்கும் - என்றார். (ப)

## கூடிய விலையில் அரிசி விற்பனை;

### சாவ. வர்த்தகருக்கு ரூ. 4.500 தண்டம்

சாவகச்சேரி,செப். 3

நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதல் விலைக்கு சம்பா அரிசி விற்பனை செய்த வர்த்தகருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று தண்டம் விதிக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட பாவனையாளர் அதிகார சபையினர் அண்மையில் நடத்திய திடீர் பரிசோதனையில் கூடுதல் விலைக்கு சம்பா அரிசியை விற்பனை செய்த வர்த்தகருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட,போது வர்த்தகர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 4 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ப-9)

## தொல்லைகளுக்கு ஆளாகும் பெண்கள்

### சுட்டிக்காட்டுகின்றார் அபிராமி சிவலோகானந்தன்

கொழும்பு, செப்.3

ஆடைத்தொழிற்சாலைகளில் தாம் பணியாற்றும் பிரிவுகளில் பெண்கள் தொல்லைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் என தொழிலாளர் உரிமைகள் மற்றும் நலன்களுக்காக செயற்படும் ஏசிய ஃபுளோர் வேஜ் அலையன்ஸ் அமைப்பின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் அபிராமி சிவலோகானந்தன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடக்கு மாகாணத்திலுள்ள மக்களுக்கு ஆடைக் கைத்தொழில் கலாசாரம் என்பது புதிய விடயமாக இருக்கின்ற நிலையில் அங்கு பணிபுரிகின்ற பெண்கள் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்திலுள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் பணியாற்றுவதற்காக நிறுவனங்களுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தங்கள் முற்றுமுழுதாக சிங்கள மொழியிலேயே இருக்கின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## ரஞ்சித், ஆசு மாரசிங்க ஆணைக்குழுவில் சாட்சி

கொழும்பு, செப்.3

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் விசாரிக்க நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் முன்னாள் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஆசு மாரசிங்க ஆகியோர் நேற்று முன்னிலையாகினர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு அதிகாரிகள் கடந்த சில நாள்களாக பல அரசியல்வாதிகளை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர். இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த புதன்கிழமையும், ரணில் விக்கிரமசிங்க கடந்த திங்கட்கிழமையும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப-இ)



## வாகன விற்பனையாளர் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, செப்.3

இலங்கையில் உள்ள அனைத்து மோட்டார் வாகன விற்பனையாளர்களும் ஒன்றிணைந்து நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

கொழும்பில் உள்ள பழைய நாடாளுமன்றத்திற்கு முன்பாகவே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்தியாவில் இருந்து நாட்டுக்கு மோட்டார் வாகனங்கள் அண்மைக் காலமாக இறக்குமதி செய்யப்படவில்லை, அதற்கான காரணம் என்ன? அரசே! கூறு என்று ஆர்ப்பாடத்தில் அவர்கள் வலியுறுத்தினர் (ப-இ)

## சரத் வீரசேகரவுக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு, செப்.3

மாகாண சபைகளை ஒழிக்க வேண்டும் என ராஜாங்க அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ள கருத்துக்கு எதிராக பொதுஜன பெரமுனவின் மாகாண சபை செயற்பட்டாளர்கள் சிலர் கட்சியின் தலைமையிடம் முறையிட்டுள்ளனர்.

எனினும் மாகாண சபை முறையை ஒழிக்க வேண்டும் என்று தான் வெளியிட்டுள்ள கருத்தைத் திரும்பப் பெறப்போவதில்லை என வீரசேகர குறிப்பிட்டுள்ளார்.

மாகாண சபை முறையானது அரசுக்குச் செலவுகளை ஏற்படுத்தும் வெள்ளை யானை எனவும், அதன் சுமையை மக்களால் தாங்கிக்கொள்ள முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

அவருடைய கருத்துத் தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என பொதுஜன பெரமுனவின் மாகாண சபைச் செயற்பாட்டாளர்கள் கட்சியின் தலைமையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப)

## ஆட்சியாளர்களுடன் பேசுவதில் தவறில்லை

### ஹரீஸ் எம்.பி. கூறுகிறார்



கொழும்பு, செப்.3

எமது நாட்டில் தற்போது பலமான அரசாங்கம் ஒன்று அமைந்துள்ள சூழ்நிலையில் முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆட்சியாளர்களுடன் தொடர்புபட்டு பேசித்தானாக வேண்டும். இது தவறான விடயமுமல்ல. ஆனால் நாங்கள் அவ்வாறு செயற்படுகின்றபோது சில ஊடகங்கள் நாம் கட்சி மாறப் போகிறோம் என வதந்திகளைப் பரப்பி வருகின்றன என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவுச் செய்யப்பட்டுள்ள நாங்கள் மக்களின் ஊழியர்களாகவே பணியாற்ற வேண்டியுள்ளது. இன்று முஸ்லிம்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்கி வருகின்றனர். இவற்றுக்குத் தீர்வுகளைப்பெற்றுக்கொடுக்க வேண்டியபொறுப்பை நாங்கள் சுமந்திருக்கின்றோம். நாங்கள்எதிர்க் கட்சியில் இருந்தாலும் ஆட்சியாளர்களுடன் நேரடியாகப் பேசித்தான் முஸ்லிம்க ளின் பிரச்சினைகளுக் குத் தீர்வுகளைக் காண வேண்டியுள்ளது-என்றார். (ப)

## உள்ளூராட்சி உறுப்பினரின் கருத்து ஏனையோரை தவறாக வழிநடத்தும்

### முன்னாள் தவிசாளர் மகேந்திரன் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், செப்.3

தென்மராட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் இல்லாத குறையை உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் தான் நிரப்பவேண்டும் என்ற சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் க.கஜிதன் வெளியிட்ட அறிவிப்பானது யதார்த்த விடயத்துக்குக் புறம்பானது அது ஏனைய பிரதேச சபை உறுப்பினர்களையும் தவறாக வழிநடத்தல்களுக்கு இட்டுச்செல்லும் நடைமுறையாகும்.

இவ்வாறு வலி. தென்மெற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் உறுப்பினருமான சி. மகேந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாட்டுக்குத் தேவையான சட்டங்களை உருவாக்கும் வல்லமை பொருந்தியவர்களாக இருக்கின்றமையுடன் இவர்களுடைய நாடாளுமன்ற வரப்பிரசாதங்கள், சட்ட எல்லைகள், கடமைகள், நலன்கள் என்பது எல்லையற்றவை. ஆனால் பிரதேச சபை உறுப்பினர்கள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் முன்னும், நகர சபைகள் உறுப்பினர்கள் நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் முன்னும் இயங்குகின்ற உறுப்பினர்கள், மாதத்தில் வெறும் ஒன்று அல்லது இரண்டு சபைக் கூட்டத்திற்குச் செல்வோரை நாடாளுமன்ற உறுப்பினருக்கு நிகராகச் சம்பந்தப்படுத்துவது வெறும் புரளிக்கதையும் ஏமாற்று வித்தையுமாகும். சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் கூறுவதுபோல நாடாளுமன்ற உறுப்பினர் இல்லாத குறையை உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் கொண்டு நடத்த முனைய வேண்டும் என்ற ஊடக அறிவிப்புக்கள் எம் போன்ற உறுப்பினர்களை மேலும் விசனமடையச் செய்துள்ளது. எனவே வடக்கில் உள்ள உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கும், உள்ளூராட்சி அலுவலர்களுக்கும் சிறந்த பயிற்சிகளை வழங்க வடக்கு மாகாண ஆளுநர் முன்வரவேண்டும் - என்றார். (ப-50)

# நாட்டில் 5 லட்சத்து 53 ஆயிரம் பேர் போதைப் பொருளுக்கு அடிமை!

**கொழும்பு, செப்.3**

**இலங்கையில் மொத்த சனத்தொகையில் 5 வீதமானோர் போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளனர் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தகவல் வெளியிட்டுள்ளார்.**

களுத்துறைப் பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இந்ததகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

" 2015 ஜனவரியில் இந்நாட்டில் குடு தொடர்பில் (போதைப்பொருள்) 6 ஆயிரத்து 600 வழக்குகளே இருந்தன. 2016 இல் இந்த எண்ணிக்கை 8 ஆயிரம் ஆகியது. 2017 இல் 11 ஆயிரம், 2018 இல் 12 ஆயிரம், 2019 இல் 16 ஆயிரம் என அதிகரித்துள்ளது. இவ் வருடத்தில் இதுவரை 13 ஆயிரம் வழக்குகள் பதிவாகியுள்ளன.

அத்துடன், நாட்டில் 5 லட்சத்து 53 ஆயிரம் பேர் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளனர். இது மொத்த சனத்தொகையில் 5வீதமாகும். அதாவது 20 பேருக்கு ஒருவர் என்ற அடிப்படையில் இந் நிலைமை காணப்படுகின்றது.

இந்த நிலைமையை மாற்றியமைக்கவேண்டும். போதைப்பொருளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இதற்காக விசேட செயலணியொன்றை உருவாக்க வேண்டுமெனில் அதனையும் செய்வதற்குத் தயாராகவே இருக்கின்றோம். " என்றார். (ஐ-44)

# குடிதண்ணீருக்கு அவதிப்படும் மக்கள்

ஹற்றன்,செப்.3



160 வருடங்கள் பழமையான தோட்டமொன்றில் வாழும் மக்கள், சுத்தமான குடி தண்ணீரின்றி அவதிப்படுகின்றனர்.

நுவரெலியா குடா மஸ்கெலியா கிராம மக்களே இந்த அவலத்தை எதிர்கொண்டுள்ளனர்.

கிராமத்துக்குத் தண்ணீர் வழங்கும், தாங்கி மாசுபட்ட நிலையில் காணப்படுகின்றது. அதனைப் பாதுகாப்பதற்கும், பராமரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

எனவே தண்ணீர் சுத்திகரிப்பு திட்டமொன்றை தமக்கு ஏற்படுத்த வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க)

# ஒரே நாளில் 1,810 பி.சி.ஆர். பரிசோதனைகள்

இலங்கையில் நேற்றுமுன்தினம் ஒரே நாளில் மட்டும் ஆயிரத்து 810 பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கொரோனா வைரஸ் (கொவிட் 19) பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான தேசிய செயற்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

நாட்டில் இதுவரை 2 லட்சத்து 28 ஆயிரத்து 52 பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேவேளை இதுவரை 2 ஆயிரத்து 883 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

# வேலையற்ற பட்டதாரிகள் வீதிமறியல் போரராட்டம்

கொழும்பு,செப்.3

கடந்த 2019 ஆம் ஆண்டில் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகளது, தொழில்களை உறுதிப்படுத்துமாறு கோரி நேற்று வீதிமறியல் போராட்டம் கொழும்பில் முன்னெடுக்கப்ப ட்டது.

ஆர்ப்பாட்டம் காரணமாக கொழும்பு காலி முகத்திடல் லோட்டஸ் சுற்றுவட்டம் தற்காலிகமாக மூடப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் நிதி அமைச்சு மற்றும் ஜனாதிபதி செயலகத்தில் அறிக்கை கையளித்தனர்.

கோட்டை ரயில் நிலையத்துக்கு அருகில் வீதிமறியல் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. (க)

# ஹெரோயினுடன் சந்தேகநபர்கள் கைது

கொழும்பு,செப்.3

சப்புகஸ்கந்த பகுதியில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 23 கிலோகிராம் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரி ஒருவரின் சகோதரர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-இ)

★ ★ ★ ★

கொட்டாஞ்சேனை சுமித்ராமபுர பிரதேசத்தில் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பெண்ணுக்கு 38 வயது எனவும், அவர் ஹெரோய்ன் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தார் என்றும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஹெரோய்ன் போதைப்பொருளின் பெறுமதி ஒரு இலட்சம் ரூபாவுக்கும் அதிகம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ப-இ)



### சுற்றிவளைத்து வீடுகளில் சோதனை;

# இராணுவம், பொலிஸார் மீது யாழ். மக்கள் கடும் அதிருப்தி

யாழ்ப்பாணம், செப்.3

**யாழ். குடாநாட்டில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் திடீர் சுற்றிவளைப்புச் சோதனை நடவடிக்கைகளால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதுடன், பெண்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள பல பகுதிகளில் அண்மைக்காலமாகப் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து சுற்றிவளைப்புச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். குற்றச்செயல்கள் மற்றும் போதைப்பொருள் வியாபாரங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்தச் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என இராணுவம் மற்றும் பொலிஸார் தெரிவித்து வருகின்றனர். எனினும் இதனால் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. அதிகாலை வேளைகளில் திடீரென வீட்டுக்குள் இராணுவத்தினர் நுழைவதால் அங்கு பெண்கள், சிறுமிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் எனதெரிவிக்கப்படுகிறது. சில வீடுகளில் நித்திரையில் இருக்கும்போதுகூட இராணுவம், மற்றும் பொலிஸார் வீடுகளுக்குள் செல்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. குற்றச்செயல்களைக் கட்டுப்படுவதற்கும், போதைப்பொருளைக் கட்டுப்படுத்துவதற்கும் வேறு வகையான ஏற்பாடுகளை மேற்கொள்ளாமல், ஒட்டுமொத்தமாக எல்லா வீடுகளுக்குள்ளும் சோதனை என்ற பெயரில் உள்நுழைவது சங்கடமாகவும் தொந்தரவாகவும் உள்ளது என மக்கள் தெரிவிக்கின்றனர்.

மானிப்பாய், சுன்னாகம், வட்டுக்கோட்டை, உட்பட பல பகுதிகளில் இவ்வாறான சோதனை நடவடிக்கைகள் தொடர்சியாக இடம்பெற்றுள்ளன. எனவே இது தொடர்பில் மக்கள் பிரதிநிதிகள் உரிய தரப்பினருடன் பேச வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

## தெரிவான பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதம் வழங்கல்



வவுனியா, செப்.3

வவுனியாவில் தெரிவு செய்யப்பட்ட 383பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று வவுனியா மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் வழங்கப்பட்டன.

ஜனாதிபதியின் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்டுள்ள 50,000 பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதம் வழங்கும் செயற்றிட்டம் நாடளாவிய ரீதியில் நேற்று நடைபெற்றது.

இந்நிலையில் வவுனியா மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டுள்ள 383 பட்டதாரிகளுக்கு நியமனக்கடிதம் வழங்கும் நிகழ்வு வவுனியா மாவட்டச் செயலர் எஸ்.எம்.சமன் பந்துலசேன தலைமையில் நடைபெற்றது.

இதில் வவுனியாவடக்கில் 32 பேரும், , வவுனியா தெற்கில் 20பேரும், வெங்கலசெட்டிக்குளம் பிரிவில் 28 பேரும், வவுனியா நகரில் 303 பேருமாக மொத்தம் 383 பட்டதாரிகள் தெரிவாகினர்.

நிகழ்வில் வவுனியா மாவட்ட மேலதிக மாவட்டச்செயலர் தி. தினேஷ்குமார், வன்னி பிராந்திய கட்டளைத் தளபதிகள், வவுனியா மாவட்ட நான்கு பிரிவுகளின் பிரதேச செயலாளர்கள், மாவட்டச் செயலக உயர் அதிகாரிகள், அலுவலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-18, 110)

## கசிப்பு உற்பத்தி; ரூ.50,000 தண்டம்

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட மிருசுவில் உசன் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றால் 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து கசிப்பு உடைமையில் வைத்திருந்தமைக்கு 25, ஆயிரம் ரூபாவும், உற்பத்திக்குப் பயன்படுத்தும் உபகரணங்கள் வைத்திருந்த குற்றத்துக்கு 25 ஆயிரம் ரூபாவுமாக 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

## தொல்பொருள்களுடன் நபரொருவர் கைது

கம்பஹா, செப்.2


கம்பஹா மினுவங்கொடை பகுதியில் சட்டவிரோத புதையல் அகழ்வு நடவடிக்கைகளின் மூலமாக பெற்றுக்கொண்டவை என சந்தேகிக்கப்படும் தொல்பொருள்களுடன் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சிறிய மாணிக்கக்கற்கள், இரண்டு புத்தர் சிலைகள், செம்பு மற்றும் தங்கமுலாம் பூசப்பட்ட சிலைகள் போன்றன சந்தேகநபரிடமிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ந-இ)

## பாதுகாப்பான ரயில் கடவையை அமைக்கக் கோரி கவனவீர்ப்பு

வவுனியா, செப்.3

வவுனியா ஓமந்தை பன்றிக்கெய்தகுளம் பகுதியில் பாதுகாப்பான ரயில் பாதை அமைக்குமாறு கோரி கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.



வவுனியா ஓமந்தை பன்றிக்கெய்தகுளம் பகுதியில் அமைக்கப்பட்ட பாதுகாப்பற்ற ரயில்கடவை பாதைக்கு பதிலாக அதனை மூடிவிட்டு புதிய கடவைப் பாதை அமைத்துத் தருமாறு கோரியே போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

அவ் இடத்துக்கு வந்த வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும், வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவருமான குலசிங்கம் திலீபன் அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடியதுடன், பாதுகாப்பான முறையில் உடனடியாக புதிய பாதை அமைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் அவ் இடத்துக்கு ரயில்வே திணைக்கள அதிகாரிகள், ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, வவுனியா தெற்கு பிரதேச சபை தவிசாளர், மாகாணசபை முன்னாள் உறுப்பினர்கள் எனப் பலரும் வருகைதந்து மக்களின் கோரிக்கை தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தனர். (ஐ-18)

## இந்து மயானத்தை தரமுயர்த்த முடிவு

கொடிகாமம், செப். 3

தென்மராட்சி பகுதியில் அமைந்துள்ள வேம்பிராய் இந்து மயானத்தை தரமுயர்த்துவதற்காக சாவகச்சேரி பிரதேச சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான பாதீடு தயாரித்தல் தொடர்பாக கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் போது தவிசாளர் இதனைத் தெரிவித்தார். வேம்பிராய் இந்து மயானத்தை தென்மராட்சி பிரதேசத்தில் ஒரு தரமான மயானமாகத் தரமுயர்த்த வேண்டும். இதற்காக வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தவிசாளர் மேலும் தெரிவித்தார். (ஐ-159)

## 15,000 தண்டம்

அனுமதிப்பத்திரம் இன்றி சாராயம் விற்பனை செய்த எழுதுமட்டுவாழ் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றால் 15 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்க ப்பட்டது.

அரச சாராயப் போத்தலில் கசிப்பு வைத்திருந்த சாவகச்சேரிவாசியை 250 மணித்தியாலயம் சமூக சேவையில் ஈடுபடுத்த நீதிமன்ற சமுதாயம் சார் சீர்திருத்தப் பிரிவில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டது. (ஐ-9)

கார்,வான் குத்தகைக்கு தேவை
கார்கள்,வான்கள் மாதாந்த குத்தகைக்கு சாரதி அல்லாமல் தேவை
075 090 6486

ஆசிரியர் தேவை
பிரபல தனியார் பாலர் பாடசாலைக்கு சாவகச்சேரி, நல்லூர், கோப்பாய், சங்கானை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பணியாற்றக்கூடிய ஆசிரியர்கள் தேவை.
தொடர்புகளுக்கு:
077 408 3656, 077 468 2951

பிரத்தியேக ஆங்கில வகுப்புகள்
தரம் 6 தொடக்கம் 12 வரையுள்ளமாணவர்களிற்கு புதிய ஆங்கில வகுப்புகள் ஆரம்பமாக உள்ளது
ஆரம்பம்: 05.09.2020
சனிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு
ஆசிரியர்: Mrs.INFANTA MICHAL
New science Hall
KANNATHIDDY ROAD, JAFFNA
தொடர்பு: 077 791 7611

# அதிபரின் இடமாற்றத்துக்கு எதிர்ப்பு

பாடசாலையை அபிவிருத்தியின்பால் இட்டுச் செல்லும் அதிபரை இடமாற்ற அனுமதிக்க மாட்டோம் என்று தெரிவித்து, மாணவர்களின் பெற்றோர்கள், பொது அமைப்பினர் மற்றும் பாடசாலை மாணவர்கள் அமைதிவழிப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். அந்தப் போராட்டத்தின் பலனாக அதிபரின் இடமாற்றம் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டது.பள்ளிமுனை மன்.புனித லூசியா பாடசாலை அதிபரை இடமாற்ற வேண்டாம் எனத் தெரிவித்தே அவர்கள் நேற்றுக் காலை பாடசாலைக்கு முன்பாக அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

வருடாந்தஇடம்மாற்றத்தின்போது இந்தப் பாடசாலை அதிபருக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டது. எனினும் இது சம்பந்த மாக கல்வி வலய இடமாற்ற சபைக்கு முறையீடு செய்யப்பட்டிருந்தது. முறையீடு பரிசீலனைக்கு எடுக்கப்பட்டி ருந்தது. எனினும், அதிபரை தற்காலிக மாக மன்னார் கோட்டக் கல்வி வலயத்தில் இந்த வருடம் மட்டும் கடமையாற்றுமா றும், பாடசாலையின் புதிய அதிபருக்கு பொறுப்பை வழங்கும்படியும் கடந்த திங் கட்கிழமை இடமாற்றக் கடிதம் அனுப்பப் பட்டது. இந்த நிலையிலேயே பாடசாலைச் சமூகத்தால் நேற்று ஆர்ப்பாட்டம் முன் னெடுக்கப்பட்டது.

அதிபர் ஓய்வு பெறுவதற்கு ஓரிரு வருடங் களே உள்ள நிலையில் அவரின் இடமாற் றத்தை நிறுத்துமாறு ஆர்ப்பாட்டக் காரர்க ளால் கோரப்பட்டது. அத்துடன், அந்த அதிபராலேயே பாடசாலை துரித அபிவி ருத்தி அடைந்து வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.


இது தொடர்பாக மன்னார் கல்வி வலயப் பணிப்பாளர் பிறட்லி தெரிவித்ததாவது;

பாடசாலை அதிபருக்கு வருடாந்த இடமாற் றம் வழங்கப்பட்டது. இவர் இது விடயமாக முறையீடு செய்தார். இதற்க மைய அவருக்குத் தற்காலிகமாகவே மன்னார் கோட் டக் கல்வி அலுவ லகத்தில் கடமை புரியும்படி கல்வி அமைச்சின் வேண்டுகோளுக் கிணங்க இடமாற் றம் மேற்கொள் ளப்பட்டுள்ளது. எனினும் இது விடயமாக கல்வி அமைச்சுக்கு தெரிவிக்கப்பட் டுள்ளது. அங்கி ருந்து தகுந்த பதில் கிடைக்கும் வரைக்கும் இந்த இடமாற்றம் இடை நிறுத்தி வைக்கப்ப டுகிறது-என்றார்.

(ஐ-60)

---

## மரண அறிவித்தல்



பிறப்பு 30 . 12 . 1944 — இறப்பு 02 . 09 . 2020

### நாகலிங்கம் நவரட்ணம்

கருங்காலி காரைநகரை பிறப்பிடமாகவும் பதுளை, நமுனுகுலவை வசிப்பிட மாகவும் கொண்ட நாகலிங்கம் நவரட்ணம் நேற்று (02.09.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் மீனாட்சி தம்பதியரின் புதல்வரும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயரூபன், சிவக்குமார் (மயூரன்), ஜெயகௌரி, வரலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாலன், தனஞ்சயன், கார்த்திகா ஆகியோரின் மாமனாரும், கஜலக்சுமி, கிருஷானி, காவியவாஷினி, ஸ்ரீவித்தியா ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2020) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் கருங்காலி காரைநகரில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீலங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

---

## மரண அறிவித்தல்



தோற்றம் 29 . 11 . 1955 — மறைவு 01 . 09 . 2020

### திருமதி பாமா சோமசுந்தரம்

பண்டிதவாசம் கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் Basel City ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாமா சோம சுந்தரம் நேற்று முன்தினம் (01.09.2020) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் மற்றும் சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், கீர்த்திகன், கலாதன், கபிலன், ஆகியோரின் பாச மிகு தாயாரும், உமா சரவணமுத்து (இலங்கை), சித்திரா சிவானந்தன் (இலங்கை), அம்பிகா குலசிங்கம் (நியூசிலாந்து), சித்கணேசன் வேலுப்பிள்ளை (கனடா), மல்லிகா வசந்தகுமார் (கனடா) சிவபாலன் வேலுப் பிள்ளை (கனடா), தேவிகா காண்டீ பன் (சுவிஸ்), ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.


அன்னாரின் நல்லடக்கம் நாளை (04.09.2020) வெள்ளிக் கிழமை சுவிஸில் இடம்பெறவுள்ளது. இந்த அறிவித்தலை உற் றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள் ளவும்.

பண்டிதவாசம்,
கரவெட்டி மேற்கு, கரவெட்டி
0212263042

தகவல் :
உமா (சகோதரி)

---

## மரண அறிவித்தல்



தோற்றம் 27 . 03 . 1937 — மறைவு 02 . 09 . 2020

### நடராசா மருதலிங்கம்

ஏழாலையைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட நடராசா மருதலிங்கம் நேற்று (02.09.2020) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா புவனேஸ்வரி தம்பதியரின் மருமகனும், சாரதாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சந்திரசேகரத் தின் (கனடா), பாசமிகு சகோதரனும், சித்திராதேவி (சித்திரா) மலர்வண்ணன் (சுவிஸ்), ஜெயராமன் (சுதன்-லண்டன்), காவேரி (சுவிஸ்), கோகிலா (லண் டன்), ஜெயமோகன் (தீபன்-லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நித்திய வாணி, கிருஷ்ணபவானி, லில்லிமலர் (லண்டன்), நற்குணசீலன் (சீலன்-உரும்பிராய்), ஜெயக்குமார் (கனடா), சிறிகுமார் (லண்டன்), வர்ண பவானி (ஜேர்மனி), குகன் (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான வரதசிரோன்மணி, குண ரட்ணம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சிறிதரன், ரவீந்திரகுமார் மற்றும் சாரதா, சூரியப்பிரபா, செந்தில்குமரன், அஜனிதா ஆகி யோரின் பாசமிகு மாமனாரும், நிரோஷன், மாதுரி, சினோஜன், தினிக்ஷா, அபி ஷேக், அபினா, ஷருண், சஞ்சயன், நிரோஷா, ஹரிகரன், கீர்த்தனா, கிஷோன், அதர்வா, ஆகாஷ், அபினாஷ், அஷ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2020) வியாழக்கிழமை பிற்பகல் 01 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, தகனக் கிரியைகள் கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி இந்து மடயானத்தில் இடம் பெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

021 490 5102, 076 267 4004

---

## மரண அறிவித்தல்

### திருமதி ராசேந்திரபதி விமலாதேவி



தோற்றம் 07.04.1947 — மறைவு 02.09.2020

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கலட்டி லேன் கோண்டாவில் மேற் கைப் வசிப்பிடமாகவும் கொண்ட ராசேந்திரபதி விமலாதேவி நேற்று (02.09.2020) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான வீரசிங்கம் - நாகரத்தினம் தம்பதியரின் புதல்வியும், காலஞ் சென்றவர்களான பொன்னுத்துரை - செல்லம்மா தம்பதியரின் மருமக ளும், ராசேந்திரபதியின் அன்பு மனைவியும், ரேனன் (மகன் - கோண்டாவில்), சுபோதினி (மகள் -கனடா) ஆகியோரின் அன்பு தாயும், கோனேஸ்வரி, கிரிதரன் ஆகியோரின் அன்பு மாமியும், மது மிதன் - கஜாலினி, ஆனந்தி, ஆத்மி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2020) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ராசேந்திரபதி குடும்பம்
கலட்டி லேன், கோண்டவில் மேற்கு,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

021 221 5024, 077 234 2791

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 20 . 07 . 1931 | 02 . 09 . 2020 |

### திருமதி சின்னத்தங்கை (ஜெயமேரி) கிருஷ்ணப்பிள்ளை

உரும்பிராயை பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தங்கை (ஜெயமேரி) கிருஷ்ணப்பிள்ளை நேற்று (02.09.2020) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நன்னித்தம்பி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்றவரான கிருஷ்ணப்பிள்ளையின் அன்பு மனைவியும். காலஞ்சென்றவர்களான பாக்கியம். அன்னம்மா மற்றும் சகோதரன் நடராசா (டென்மார்க்). நடேஸ்வரி. பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும். ஜெகராசா (டென்மார்க்). ஜெயறூபா (றதி -ஆஸ்திரேலியா - முன்னைநாள் ஆசிரியர் - சென் பற்றிக்ஸ் கல்லூரி மற்றும் சைவ மங்கையர் கழகம் வெள்ள வத்தை) ஆகியோரின் பாசமிகு தாயும். கமலநாதன் (ஆஸ்திரேலியா). பிரான்சிஸ்கா (டென் மார்க்) ஆகியோரின் அன்பு மாமியும். அமண்டா (டென்மார்க்). தர்சிக்கா (ஆஸ்திரேலியா). சம்மிகா (ஆஸ்திரேலியா). துசித்திரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (03.09.2020) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் உள்ள முதியோர் இல்லத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்

தொடர்புகட்கு :
ஜெகராசா (டென்மார்க- + 452 084 3529
ஜெயறூபா (றதி - ஆஸ்திரேலியா - + 614 254 35021
பற்றிமா - 077 459 8192

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 19 . 03 . 1978 | 05 . 08 . 2020 |

### திருமதி கவிதா சுதாகரன் (BA,Dip.in.Edu.)

(ஆசிரியை - யா/ புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி)

எங்கள் குல விளக்காய் உதித்த நீ
எங்களை பாதியிலே விட்டுப் போவதற்கா?
என் கருவில் பத்துமாதம் இருந்தாய் நீ...
நாற்பத்திரண்டு வருடம் எம்முடன் வாழ்வதற்கா ?
என்றும் நீ எங்கள் நெஞ்சில் வாழ்ந்திடுவாய்!

எமது குடும்பத்தலைவியின் மரணச்செய்தி அறிந்து நேரில் ஓடோடிவந்து கலந்து கொண்ட உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தினர் மற்றும் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் மற்றும் தொலைபேசி வாயிலாக ஆறுதல் கூறியவர்களுக்கும் இக் கிரியைகள் சிறப்புற நடத்திய அத்தனை பெருமக்களுக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (03.09.2020) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்ததனையிலும் அதனைத்தொடர்ந்து நடை பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறுக்கு வீதி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

குடும்பத்தினர்.
076 709 1595, 077 728 9971,
077 941 0182

## மரண அறிவித்தல்

### செல்வி மாலினிதேவி முத்துரத்தினம்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 22.10.1954 | 01.09.2020 |



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி மாலினிதேவி முத்துரத்தினம் நேற்று முன்தினம் (01.09.2020) செவ்வாய்க்கிழமை இறைபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துரத்தினம்-தவ மணி ஆகியோரின் கனிஷ்ட புத்திரியும், பத்மாதேவி, கமலாதேவி, ரோகிணிதேவி, தவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஜெயராஜசிங்கம் மற்றும் Dr. கனகரத்தினம், தர்மஜெயசூரியர், உமா ஆகி யோரின் அன்பு மைத்துனியும், உஷேந்தன், ஜெயந்தன், ஜெனினி, சுதாஜினி, அனோஜா, நிரோஜா, சஜீவ், ரோகன் ராஜ், தேனுகன் ஆகியோரின் சிறியதாயாரும், சர்பிந், பானு, சியாமா, தயாபரன், கிருஷாந், தர்சினி, மோகனன், சுஜித்தா, வேல்தாஸ், விமலராஜன், இந்துகா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2020) வியாழக்கிழமை 10 மணியளவில் அரச வீதி உரும்பிரா யில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காட்டு இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரச வீதி,
உரும்பிராய்.

தகவல்:
த.தர்மஜெயசூரியர்,

021 -223 0785, 077 175 8485

## Ministry of Agriculture
## AGRICULTURE SECTOR MODERNIZATION PROJECT

International Development Agency of the World Bank with Ministry of Agriculture is implementing Agriculture Sector Modernization Project in line with a Country Partnership Strategy (CPS) to support small holder farmers to produce competitive and marketable commodities, improve their ability to respond to market requirements, and move towards increased commercialization. Estimated cost of the project is US $ 58.63 Mn.

Applications are invited to the provincial Project Management Unit of Northern Province by the Chief Secretary, Northern Province, from qualified candidates who possess the qualification and experience for the following post according to the circular of Management Services Department **No. 01/2019 of 15.03.2019**

**01. Senior Engineer (PS3) - 01 Post**

• Required Qualifications: (I or II or III below)

1. A successfully completed Bachelor's Degree in the relevant field, which is rec ognized by the University Grants Commission

OR

A Qualification recognized by the University Grants Commission as an equiva lent qualification to the degree in the relevant field.

OR

An Associate membership A Similar professional qualification obtained from recognized professional institution in the relevant field.

WITH

At least 10 years post qualifying experience at Managerial level

II. A successfully completed Bachelor's Degree in the relevant field, which is rec ognized by the University Grants Commission

OR

A qualification recognized by the University Grants Commission as an equiva lent qualification to the degree in the relevant field.

OR

An Associate membership/A similar professional qualification obtained from a recognized professional institution in the relevant filed

AND

A postgraduate Degree in the relevant field or corporate/Charted membership or a similar professional qualification obtained from a recognized professional institution in the relevant field.

WITH

At least 8 years Post qualifying experience in Managerial level.

III. Class 1 officer of a Government All island services or a similar status in the relevant field.

WITH

At least 03 years of experience in the Class I post.

• Shall not be more than 64 years of age on the closing date of applications.

**Method of Selection:** Shortlisted applicants based on qualifications and experience will be called for the interview.

**Conditions of Employment:**

Officers belonging to Government Service will be recruited on secondment basis and persons outside the Government Service will be recruited on contract basis. All appointments will be initially for one year period and extension of service will be based on successful performance.

**Applications:**

All Applicants are requested to forward their applications together with Curriculum Vitae along with two non-related referees and copies of the certificates under registered post on or before **17th September 2020** to reach the address, **Provincial Deputy Project Director Agriculture Sector Modernization Project, No. 68, Kachcheri Nallur Road, Jaffna** Applicants currently in government / semi government services should forward their applications through the Heads of relevant Departments. The post applied for and the project name should be clearly stated on the top left - hand comer of the envelope containing application. The decision of the Chief Secretary is final and conclusive on the above recruitment.

**A Pathinathan,**
**Chief Secretary,**
**Northern Province**

## பதவி வெற்றிடங்கள்

பேக்கரியில் காலியாக உள்ள
பணியிடத்திற்கு பணியாற்ற தகுதிவாய்ந்த
விண்ணப்பதாரர்கள்
மாத்திரம் அழைப்பினை
மேற்கொள்ளகேட்டுக்கொள்கின்றோம்
**வெற்றிடம்**
**பேக்கரி பொருள்கள் தயாரிப்பாளர்**
அழைப்பினை மேற்கொள்ள வேண்டிய
தொ.பே: 077 785 8317

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
1 சதுர அடி - 45 ரூபா
077 334 1281

## நாகபூசனி திருமண சேவை

மிகப்பொருத்தமான மணமக்கள்
ஜாதகங்கள் உடன்தரப்படும்.
இல.5. ஐந்தாம் ஒழுங்கை. பலாலி வீதி.
கந்தர்மடம். யாழ்ப்பாணம்.
0771387596, 0719999306

# University of Jaffna, Sri Lanka
# Faculty of Arts
# Walk- in- interview

Walk in Interview for the appointment to the Post of Temporary Assistant Lecturer/ Temporary Instructor will be held on 15th September 2020 in the Mini Board Room of the Faculty of Arts, University of Jaffna, in the following manner.

**Temporary Assistant Lecturer/Temporary Instructor in Art & Design 9.30 am**
**Temporary Assistant Lecturer/ Temporary Instructor in Music (Veena ,Violin ,Vocal ,Miruthangam) 10.15 am**
**Temporary Assistant Lecturer in Information and Communication Technology 2.00 pm**
**Temporary Assistant Lecturer in Law 2.30 pm**

**Minimum requirements/Qualifications for the Post of Temporary Assistant Lecturer/Temporary Instructor**

1. A degree with specialization in the relevant subject with First or Second class (upper division) Honors.

Or

2. A degree with specialization in the relevant subject with Second Class (Lower division) Honors.

Or

3. (a) A degree with specialization in the relevant subject without Honors or any other degree with at least Second Class Honors and
(b) A recognized postgraduate degree in the relevant subject.
4. Candidates who are awaiting results for the final degree examination may also be present.

| Post | Salary Scale |
|---|---|
| Temporary Assistant Lecturer | Rs. 49,860/- p.m (fixed) |
| Temporary Demonstrator/Instructor | Rs. 40,920/- p.m (fixed) |

Interested candidates with the required qualifications are expected to be present for the interview for the above mentioned posts with educational and any other relevant certificates (originals) along with certified copies, National identity Card and Curriculum Vitae.

**Registrar**
**University of Jaffna**

## NOTICE
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## OPERATIONAL TECHNICAL SECRETARIAT (OTS)
## WORLD BANK FUNDED ACCELERATING HIGHER EDUCATION EXPANSION AND DEVELOPMENT (AHEAD) OPERATION
# WALK – IN - INTERVIEW

POST OF PROJECT ASSISTANT (FULL TIME) – ON CONTRACT BASIS – 04 VACANCIES

ELTA ELSE – FACULTY LEVEL DEVELOPMENT PROJECT
FACULTY OF ARTS, FACULTY OF AGRICULTURE, FACULTY OF SCIENCE & FACULTY OF APPLIEDSCIENCE

Walk in Interview for the above post (Full Time) – On Contract Basis will be held on 08.09.2020 – 9.00Am to 12.00 Noon at the Staff Development Center, Seminar Hall of the University of Jaffna.

Eligible Candidates are requested to be present for an interview with self-prepared application in the prescribed format along with relevant original certificates and the National Identity Card (NIC) on the date and the time mentioned above.

For further details please visit the University of Jaffna website www.jfn.ac.lk.

Registrar

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில் 06.09.1940
விண்ணில் 14.09.2019



அமரர்
**வேலுப்பிள்ளை வில்வரெத்தினாம்பாள்**

பாசமும் அறிவும் பண்பும் ஊட்டி
தரணியில் எமை உயர்த்தியவரே!
பாரினில் சிறப்புடனே வாழ - உம்மை
மெழுகாக உருக்கி எமை வாழ வைத்தீர்

கள்ளமற்ற மனமும் களங்கமற்ற அன்பையும்
உதட்டோரம் உதிர்க்கும் உங்கள் புன்னகையையும்
காணாது வாடி நிற்கின்றோம் - தாயே!
ஆண்டு ஒன்று கடந்தாலும் ஆறவில்லை எம்துயர்.

**சுண்டுக்குழி முருங்கன், குடும்பத்தினர்.**
**மன்னார்.**

## சிக்கலற்ற...

களை வழங்குமாறு ஜனாதிபதி கோத்தா
பய ராஜபக்ச அதிகாரிகளுக்கு பணித்
தார்.

காணி அபிவிருத்தியின் பின்னர் வேறு
ஒருவருக்கு கைமாற்ற முடியாது. பயன்
படுத்தப்படாத எல்.ஆர்.சி. காணிகளை
அபிவிருத்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்
படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற
காணி முகாமைத்துவ அலுவல்கள்,
அரச வியாபார காணிகள் மற்றும் சொத்
துக்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்
சின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக
இடம்பெற்ற கலந்துரையாடலில் ஜனாதி
பதி மேற்கண்டவாறு பணித்தார்.

மக்கள் பரம்பரையாக வாழ்ந்து வந்தா
லும், பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டிருந்
தாலும் உறுதிப்பத்திரம் இல்லாமையால்
அவர்கள் பல்வேறு சிக்கல்களுக்கு உட்
பட்டுள்ளனர். அதனால் அபிவிருத்தியும்
பின்னடைவு கண்டுள்ளது.

குத்தகைக்கு விடப்பட்டுள்ள காணிகளை
அபிவிருத்தி செய்ததன் பின்னர் காணி
மறுசீரமைப்பு ஆணைக்குழு அல்லது
காணி உரித்துடைய நிறுவனம் அல்லது
வேறு தரப்பினருக்கு பொறுப்பளித்தல்
விவசாயிகள் முகங்கொடுத்துள்ள
மேலும் ஒரு சிக்கலாகும். அவ்வாறான
நிலைமைகள் ஏற்படுவதற்கு இடமளிக்க
வேண்டாம் என்றும் ஜனாதிபதி பணித்
தார்.

குத்தகை அடிப்படையில் காணி ஒன்றின்
சிக்கலற்ற தன்மையை உறுதி செய்து
கொள்வதற்கு 20க்கும் அதிகமான நிறு
வனங்களில் மக்கள் அனுமதி பெற
வேண்டும். அதற்காக பல வருடங்கள்
செல்கின்றன. இத்தகைய நிலைக்கு இட
மளிக்காது இலகுவானநிபந்தனைகளின்
கீழ் காணிகளின் உறுதிகளை வழங்குவ
தற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதி
பதி மேலும் குறிப்பிட்டார். (த)

## குறைந்தளவு...

பிராந்தியப் பொறுப்பதிகாரி த.பிரதீபன்
தெரிவித்தார்.

கீழ் வளிமண்டலத்தில் ஏற்பட்ட தளம்பல்
காரணமாக மழை பெய்கின்றது. சில
நாள்களாக இந்த நிலைமை
காணப்பட்டது என்றும் அவர் தெரிவித்
தார்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் கடந்த
இரண்டு நாள்களில் மட்டும் 90.8 மில்
லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.
நேற்றுமுன்தினம் காலை 8.30 மணியி
லிருந்து நேற்று 8.30 மணி வரை 55.4
மில்லிமீற்றர் மழை பெய்துள்ளது. நேற்
றுக் காலை 8.30 மணியிலிருந்து
மாலை 2.30 மணி வரையில் 22.7
மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. அதன்
பின்னர் நேற்று இரவு வரை மழைவீழ்ச்சி
பதிவாகவில்லை.

அதிகளவான மழைவீழ்ச்சியாக அச்சுவே
லிப் பகுதியில் 92.9மில்லிமீற்றர் பதிவா
கியுள்ளது. தெல்லிப்பழை பிரதேசத்தில்
84.4மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகி
யுள்ளது.

கடந்த ஜனவரி மாதத்திலிருந்து நேற்று
வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் 343.9
மில்லிமீற்றர் பதிவாகியுள்ளது என்றும்
அவர் மேலும் தெரிவித்தார். (த-20)

## மூன்று....

தங்க வைக்கப்பட்டு அவர்களுக்குத்
தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்பட
வுள்ளது.

பிரதேச செயலகங்களில் பட்டதாரிகள்
நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்ற
னர். அவர்களுக்கான பயிற்சிகள்
அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளன. 5
வகையான பயிற்சிகள் பிரதானமாக
வழங்கப்படவுள்ளன. இவற்றை இராணு
வத்தினரே வழங்கவுள்ளனர்.

முதல் கட்டமாக இயக்கச்சி மற்றும் கிளி
நொச்சியில் அமைந்துள்ள இராணுவ
முகாமில் வைத்து யாழ்ப்பாணம் மற்றும்
கிளிநொச்சியைச் சேர்ந்த பட்டதாரிக
ளுக்கு தலைமைத்துவப் பயிற்சி வழங்
கப்படவுள்ளது. மூன்று வார காலம்
அவர்கள் இராணுவ முகாமில் தங்கியி
ருந்தே பயிற்சிகளை மேற்கொள்ள
வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.
(ஒ.5)

## நாவிதன்..

னாமாச் செய்திருந்த நிலையில் அந்தப்
பதவி வெற்றிடமானது. புதிய தவிசாள
ரைத் தெரிவு செய்வதற்கான விசேட
அமர்வு பிரதேச சபை சபா மண்டபத்தில்
நேற்று புதன்கிழமை பதில் தவிசாளர்
ஏ.கே அப்துல் சமட் தலைமையில் நடை
பெற்றது.

தவிசாளர் தெரிவுக்கான தேர்தலை
கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணை
யாளர் எம்.மணிவண்ணன் நடத்தினார்.
தேர்தலுக்கான வேட்பாளர்களை முன்
மொழியுமாறு அவர் சபையைக் கோரி
னார். இருவரின் பெயர்கள் தவிசாளருக்
காக பிரேரிக்கப்பட்டது. சிறிலங்கா சுதந்
திரக் கட்சி உறுப்பினரும் பதில் தவிசாள
ருமான ஏ.கே. அப்துல் சமட் சுயேச்சை
குழு உறுப்பினரான அமரதாஸ ஆனந்
தவின் பெயரை பிரேரித்தார். அதனை
சுயேச்சை குழு உறுப்பினர் தி. யோகநா
யகன் ஆமோதித்தார்.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
சார்பாக அந்தோனி சுதர்சனை அந்தக்
கட்சி உறுப்பினர் முத்துக்குமார் விக்
னேஸ்வரன் பிரேரிக்க அதே கட்சியைச்
சேர்ந்த மற்றுமொரு உறுப்பினரான
மு.நிரோஜன் வழிமொழிந்தார். அத
னால் இருவரின் பெயர்களும் வெளிப்ப
டையான வாக்கெடுப்புக்கு விடப்பட்டன.
அமரதாஸ ஆனந்தவுக்கு ஆதரவாக 07
வாக்குகளும் தமிழ்த் தேசியக் கூட்ட
மைப்பு சார்பாக அந்தோனி சுதர்சனுக்கு
6 வாக்குகளும் அளிக்கப்பட்டன. ஒரு
மேலதிக வாக்கால் சுயேச்சைக் குழு
உறுப்பினரான அமரதாஸ ஆனந்த
வெற்றிபெற்றார். அவரை தவிசாளராக
அறிவிக்கின்றேன் என்று கிழக்கு
மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்
எம்.மணிவண்ணன் கூறினார்.

அமர்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
உட்பட ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா
சுதந்திரக் கட்சி, சுயேச்சைக் குழு மற்றும்
முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும்
நல்லாட்சிக்கான தேசிய முன்னணி
உறுப்பினர்களும் பங்கேற்றிருந்தனர்.

புதிய தவிசாளர் அமரதாஸ ஆனந்த
கருத்துத் தெரிவிக்கையில்,

சிறி லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த
பதில் தவிசாளர் ஏ.கே. அப்துல் சமட்
அ.சுபைதீன் ஐக்கிய தேசிய கட்சியின்
உறுப்பினர் சோ.கிருபைமலர், சுயேச்சை
உறுப்பினர்களான தி.யோகநாயகன், இ.
யோகேஸ்வரி மற்றும் நல்லாட்சிக்கான
தேசிய முன்னணி உறுப்பினர் மு.இ.மு.
ஜகான் ஆகியோர் எம்முடன் இணைந்த
தால் ஆட்சியைக் கைப்பற்ற முடிந்தது.
என்றார்.

அதேவேளை புதிய தவிசாளரரை தெரிவு
செய்ய வாக்களிப்பு ஆரம்பமாவதற்கு
முன்னர் அம்பாறை மாவட்டத்தின் முக்
கிய அமைச்சர் ஒருவரின் இணைப்பு
செயலாளர் வருகை தந்ததுடன் சில
உறுப்பினர்களை அழைத்து சென்று
கலந்துரையாடலிலும் ஈடுபட்டிருந்தார்.

புதிய தவிசாளர் தெரிவை முன்னிட்டு
சபை அமர்வு இடம்பெற்ற நாவிதன்
வெளி பிரதேச மண்டப பகுதியில் பொலி
ஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்
பட்டிருந்தனர். (த)

## 38 பேருக்கும்...

பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவு வழங்கி
யமையால் தம்மை ஐக்கிய தேசியக் கட்
சியின் உறுப்புரிமையிலிருந்து
நீக்கியமைக்கு எதிராக அவர்கள் தாக்கல்
செய்த மனு நேற்று பரீசீலனைக்கு எடுத்
துக்கொள்ளப்பட்டது.

கட்சி உறுப்புரிமையை நீக்கும் செயற்
பாட்டை தடுத்து, அதற்கு எதிராக இடைக்
கால தடையுத்தரவைப் பிறப்பிக்குமாறு
மனுதாரர்கள் கோரியிருந்தனர். அத்து
டன், கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்கி
உள்ளூராட்சி மன்றங்களின் பதவியிலி
ருந்து நீக்குதல் தொடர்பில் வர்த்தமானி
யில் அறிவிப்பதை நிறுத்துமாறு உத்தர
விடுமாறும் அவர்கள் கோரியிருந்தனர்.

கொழும்பு மாநகர சபை உள்ளிட்ட உள்
ளூராட்சி மன்றங்களைப் பிரதிநிதித்து
வப்படுத்தும் 38 உறுப்பினர்கள் தாக்கல்
செய்திருந்த இந்த மனு மேன்முறையீட்டு
நீதிமன்ற தலைமை நீதிபதி யு.ர்.ஆ.னு.
நவாஸ் மற்றும் நீதிபதி சோபித ராஜக
ருணா ஆகியோர் முன்னிலையில் பரிசீ
லனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன்போது மேற்கண்டவாறு தெரிவிக்
கப்பட்டது. இந்த மனு எதிர்வரும் 9 ஆம்
திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்
படவுள்ளது. (த)

## வடக்கில்...

50 ஆயிரம் பட்டதாரிகளை அரச
சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யும் நிகழ்
சித் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்
டுள்ள பட்டதாரிகள் நேற்றிலிருந்து எதிர்
வரும் 10ஆம் திகதி வரையில் கடமைக
ளைப் பொறுப்பேற்க முடியும்.

வடக்குமாகாணத்துக்குநியமிக்கப்பட்டுள்ள
3 ஆயிரத்து 290 பட்டதாரிகளில் 2 ஆயி
ரத்து 963 பட்டதாரிகள் நேற்றையதினம்
கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு
நியமிக்கப்பட்டுள்ள 2 ஆயிரத்து 78 பட்
டதாரிகளில் ஆயிரத்து 857 பேரும்,
கிளிநொச்சி மாவட்டத்துக்கு
நியமிக்கப்பட்டுள்ள 267 பட்டதாரிகளில்
244 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்
துக்கு நியமிக்கப்பட்டுள்ள 233 பட்டதாரி
களில் 214 பேரும், மன்னார் மாவட்டத்
துக்கு நியமிக்கப்பட்டுள்ள 329 பட்டதாரி
களில் 306 பேரும், வவுனியா மாவட்டத்
துக்கு நியமிக்கப்பட்டுள்ள 383 பட்டதாரி
களில் 342 பேரும் நேற்றுக் கடமைக
ளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள
னர். (ஒ.5)

## 20 ஆவது...

வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளி
யிடவும் தீர்மானிக்கப்பட்டது.

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில்
காணப்படும் 'ஜனாதிபதி ஒருவர் இரண்டு
முறை பதவி வகித்தல், தகவல் அறியும்
உரிமைச் சட்டம், நாடாளுமன்றம் மற்
றும் ஜனாதிபதியின் பதவிக் காலம் 5
வருடங்கள் ஆகிய விடயங்களைத் தவிர
ஏனையவை 20 ஆவது திருத்தத்தி
னூடாக மாற்றப்படவுள்ளன' என்று அரச
தகவல்கள் தெரிவித்தன.

அரசமைப்பின் 83 ஆவது பிரிவுக்கு
அமைய பொதுஜன வாக்கெடுப்புக்கு
செல்லவேண்டிய விடயங்கள் ஏதும்
சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூல வரைபில்
குறிப்பிடப்படவில்லை. அதாவது ஜனாதி
பதி, நாடாளுமன்றம் ஆகியனவற்றின்
பதவிக் காலத்தில் திருத்தம் செய்யப்பட
வேண்டுமாயின் மட்டுமே மக்கள் வாக்
கெடுப்பு நடத்துவது அவசியம்.
20ஆவது திருத்தத்தில் அந்த விடயங்
கள் உள்ளடக்கப்படவில்லை. ஆகவே
அரசமைப்பின் 83ஆவது உப பிரிவுக்கு
அமைய நாடாளுமன்றத்தின் மூன்றில்
இரண்டு பெரும்பான்மையுடன்
20ஆவது சட்ட மூல வரைபு நிறைவேற்
றப்பட வேண்டும் என்று சட்டமா அதிபர்
நீதியமைச்சின் செயலாளருக்கு ஆலோ
சனை வழங்கினார். இதனைத்
தொடர்ந்து அமைச்சரவையில் சமர்ப்பிக்
கப்பட்ட சட்டமூல வரைவுக்கு அமைச்ச
ரவை அங்கிகாரம் வழங்கியது. (த22)

## 20 நிறைவேறியதும்...

இது தொடர்பில் அவர் நேற்று மாலை
மேலும் தெரிவித்ததாவது:-

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலை
மையிலான அரசு சொன்னதையே செய
லில் காட்டும். ஜனாதிபதித் தேர்தல் காலத்
தின்போதும், பொதுத்தேர்தல் காலத்
தின்போதும் நாம் வழங்கிய வாக்குறுதி
கள் அனைத்தையும் நிறைவேற்றியே
தீருவோம். எதிர்க்கட்சிகள் கூறுவது
போன்று நாம் போலி வாக்குறுதிகள் எத
னையும் வழங்கவில்லை.

நல்லாட்சி அரசால் நிறைவேற்றப்பட்டி
ருந்த அரசமைப்பின் 19ஆவது திருத்தச்
சட்டம் நாட்டுக்குச் சாபக்கேடாக இருந்
தது. அதனால்தான் அதைத்
திருத்தியமைத்து 20ஆவது திருத்தச் சட்ட
வரைவைத் தயாரித்துள்ளோம். இது
நிறைவேறிய பின்னர் புதிய அரசமைப்
புக்கான சட்ட வரைபையும் தயாரிக்க
வுள்ளோம்.

நாடும் அரசும் மக்களும் ஓரணியில்
இயங்க வேண்டுமென்றால் ஒழுங்கான
நேரான அரசமைப்பு இருக்க வேண்டும்"
என்றார். (த-22)

## புலிகளுக்கு...

பிரதமருமான மஹிந்தராஜபக்ச, தமிழீழ
விடுதலைப் புலிகள் அமைப்பின் தலை
வர் பிரபாகரனுடன் உச்சி மாநாடு ஒன்
றுக்கு ஏற்பாடு செய்யுமாறு கோரினார்.
புலிகளுக்கு அதிகாரம் வழங்க அவர்
தயாராக இருந்தார் என்று நோர்வேயின்
சமாதான ஏற்பாட்டாளராகச் செயற்பட்ட
எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.
ஆங்கில ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத்
தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரி
வித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
ஒரே இலங்கைக்குள் வடக்கில் தமிழீழ
விடுதலைப்புலிகளுக்கு ஆதிக்கம்
வழங்க மஹிந்த ராஜபக்ச தயாராக
இருந்ததார். முற்றிலும் திறந்தநிலை
உச்சி மாநாடு ஒன்றை நடத்தி ஒரே இலங்
கைக்குள் தமிழீழ விடுதலைப்புலிகளின்
ஆதிக்கத்துக்கு இணங்க முடியும் என்று
மஹிந்த ராஜபக்ச எம்மிடம் தெரிவித்தி
ருந்தார்.

இறுதிப்போரின்போது வடக்கில் உள்ள
பொதுமக்களை கப்பல்களை பயன்ப
டுத்தி வெளியேற்றுவதற்கு நோர்வே
தயாராக இருந்தது. ஒவ்வொரு பொதும
கனும், தமிழீழ விடுதலைப்புலிகளின்
உறுப்பினர்களும் பதிவுசெய்யப்பட
வேண்டும் என்றும், பொதுமக்களை
தென்னிலங்கைக்கோ அல்லது வெளி
நாட்டுக்கோ அழைத்துச் செல்ல எதிர்
பார்க்கப்பட்டது. எனினும் பிரபாகரன்
அதற்கு இணங்கவில்லை.

இந்தியாவை பொறுத்தவரையில் இலங்
கையின் சமாதான முன்னெடுப்புகளுக்கு
அந்த நாடு ஆதரவாகவே இருந்தது.
எனினும் 2008ஆம் ஆண்டு செப்ரெம்
பர் மாதத்தின் பின்னர் இந்தியாவின்
கொள்கையில் மாற்றம் ஏற்பட்டது. இலங்
கையின் பிரச்சினையை இராணுவ நட
வடிக்கையின் மூலம் தீர்க்கமுடியும் என்று
இந்தியா எண்ணியது என்றார். (எ-இ)

இந்தியாவில்

# கொரோனா உயிரிழப்பில் 69 வீதமானோர் ஆண்கள்

புதுடில்லி, செப்.3

**இந்தியாவில் கொரோனாவால் உயிரிழந்தவர்களில் 69 வீதமானோர் ஆண்கள் என இந்திய மத்திய சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

உலக சுகாதார நிறுவனம் மற்றும் மத்திய சுகாதார அமைச்சகத்தில் இருந்து பெறப்பட்ட புள்ளி விபரத்தின் அடிப்படையில் கொரோனாப் பாதிப்பு தொடர்பான இந்த ஆய்வு அறிக்கை வெளியாகி உள்ளது.

அதன்படி, இந்தியாவில் கொரோனாவுக்கு பலியானவர்களில் 90 சதவீதத்துக்கும் அதிகமானோர் 40 வயதுக்கு மேற்பட்டவர்கள். கொரோனாவுக்கு பலியானவர்களில் பெண்களை காட்டிலும் இந்தியாவில் ஆண்களே அதிகம் உயிரிழந்துள்ளனர்.

வைரஸ் தொற்றினால் சுமார் 69 சதவிகித ஆண்கள் உயிரிழந்துள்ளனர். இது, பெண்களின் இறப்பை காட்டிலும் இருமடங்கு அதிகம். கடந்த ஓகஸ்ட் 22ஆம் திகதி வரை கொரோனாவால் உயிரிழந்த



56,292 பேரில் 17,315 பெண்களும், 38,973 ஆண்களும் உள்ளடங்குகின்றனர். உயிரிழந்த ஆண்களிலும் அதிகமானோர் வயதானவர்கள் என்பதும் தெரிய வந்துள்ளது. 11 தொடக்கம் 20 வயதுடைய ஆண்கள் மற்றும் பெண்களின் இறப்பு விகிதம் சரிசமமாக உள்ளது. இந்த வயதுப் பிரிவில் சுமார் 49 சதவீத பெண்கள் உயிரிழந்துள்ளனர். மேலும், 10 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் கொரோனாவினால் உயிரிழப்பது குறைவாக உள்ளது. கொரோனா உயிரிழப்புகளில் இருதய நோய், நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் மற்றும் சிறுநீரக நோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களே அதிகம் என்பதும் அந்த அறிக்கையின் ஊடாகத் தெரியவந்துள்ளது. (வ)




முகமது நபியின்

## சர்ச்சைக்குரிய கேலிச்சித்திரத்தை மீள்பதிப்பு செய்த சார்லி ஹெப்டோ

பாரிஸ், செப்.3


பிரான்ஸிய பத்திரிகையான சார்லி ஹெப்டோ.முகமது நபியின் சர்ச்சைக்குரிய கேலிச்சித்திரத்தை மீள் பதிப்பு செய்துள்ளது. 2015 ஆம் ஆண்டு முகமது நபிகள் குறித்த கேலிச் சித்திரங்களை வெளியிட்டதற்காக பாரீஸில் அமைந்துள்ள சார்லி ஹெப்டோ பத்திரிகை நிறுவனம் தாக்குதலுக்கு உள்ளானது. இதில் இந்தப் பத்திரிகையின் ஆசிரியர் ஸ்டெஃபேன் கார்போனியர் உட்பட 12 பேர் கொல்லப்பட்டனர்.


இந்த நிலையில் இஸ்லாம் சார்ந்த கேலிச்சித்திரங்களை சார்லி ஹெப்டோ பத்திரிகை மீண்டும் பதிப்பித்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோனிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பிய போது, பத்திரிகைச் செய்தியின் தலையங்கம் குறித்து தான் கண்டனம் தெரிவிக்க முடியாது. ஏனென்றால் நம்மிடம் பத்திரிகை சுதந்திரம் உள்ளது எனத் தெரிவித்துள்ளார். (வ)

## எஸ்.பி.யின் உடல்நிலை முன்னேற்றம்

சென்னை, செப்.3

பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தின் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்தத் தகவலை எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தின் மகன் எஸ்.பி.சரண் அவரது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். எஸ்.பி.பாலசுப்பிரமணியம் மெதுவாக குணமடைந்து வருகிறார் என்றும் சரண் தெரிவித்துள்ளார். (வ)





## லெபனானுக்கு புதிய பிரதமர்

பெய்ரூட், செப்.3

லெபனானின் புதிய பிரதமராக ஜெர்மனிக்கான அந் நாட்டுத் தூதர் முஸ்தபா ஆதிப் அறிவிக்கப்பட்டுள்ளார். பெய்ரூட்டில் ஓகஸ்ட் 4ஆம் திகதி வெடிவிபத்து இடம்பெற்ற கக ஹசன் தியாப் தலைமையிலான அரசுக்கு எதிராக அந்த நாட்டு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த அழுத்தம் காரணமாக ஓகஸ்ட் 11ஆம் திகதி ஹசன் தியாப் தலைமையிலான அரசு இராஜினாமா செய்தது. இதைத் தொடர்ந்து ஜெர்மனிக்கான லெபனான் தூதர் முஸ்தபா ஆதிப் தற்போது பிரதமராக அறிவிக்கப்பட்டுள்ளார். 128 பாராளுமன்ற வாக்குகளில் 90வாக்குகளைப் பெற்று அவர் வெற்றி பெற்றுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகி யுள்ளன. (வ)

## சவுதி அரச குடும்பத்தின் இரு உறுப்பினர்கள் பணிநீக்கம்

ரியாத், செப்.2

சவுதி அரேபிய அரச குடும்பத்தின் இரு உறுப்பினர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற சந்தேகத்திற்கு இடமான நிதி பரிவர்த்தனையில் இருவருக்கும் தொடர்புள்ளது எனக் கூறியே இவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிய வருகிறது. சவுதி தலைமையிலான யெமன் கூட்டணியின் கூட்டுப்படைகளின் தளபதியாக உள்ள இளவரசர் பஹத் பின் துர்கி மற்றும் அவரது மகனான பிரதி ஆளுநர் அப்துல் அஸிஸ்பின்பாஹத் பதவி நீக்கப்பட்டுள்ளனர். சவுதி மன்னரின் மகனும் முடிக்குரிய இளவரசருமான முஹம்மது பின் சல்மான் அரசில் ஊழல் விவகாரத்தில் தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். எனினும் முடிக்குரிய இளவரசர் அதிகாரத்தில் இருப்பதற்கான முட்டுக்கட்டைகளை அகற்றும் நடவடிக்கையாகவே உயர் அதிகாரிகள் மீதான செயற்பாடுகள் காணப்படுகின்றன என்ற விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. (வ-இ)

## ஆஸ்திரேலியாவுக்கு பேஸ்புக் எச்சரிக்கை

பேஸ்புக், இன்ஸ்டாகிராம் ஆகிய சமூகத் தளங்களில் ஆஸ்திரேலிய மக்கள், செய்தி வெளியீட்டாளர்கள் செய்தி பகிர்வதற்குத் தடை விதிக்கப்படும் என அந்நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பேஸ்புக், கூகுள் இரண்டும் உள்ளூர் செய்தி நிறுவனங்கள் வழங்கும் செய்திகளுக்குக் கட்டணம் செலுத்த வேண்டும் என்ற புதிய சட்டத்தை இந்த ஆண்டு அமுல்படுத்துவோம் என அவுஸ்திரேலிய அரசாங்கம் ஜூலை மாதம் தெரிவித்தது.

அதற்குப் பதிலடியாகவே பேஸ்புக் நிறுவனம் இதனைத் தெரிவித்துள்ளது. தனது இறுதி முடிவு இது என்று குறிப்பிட்ட பேஸ்புக் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் முடிவு அர்த்தமற்றது என்றும் அது அந்நாட்டுச் செய்தி நிறுவனங்களுக்கு உதவப்போவது இல்லை என்றும் தெரிவித்துள்ளது. (வ)



# இறுதிவரை 'திக்.. திக்' பாக். அணி அசத்தல்!

## மூன்றாவது ரி–20யில் வென்று தொடரைச் சமப்படுத்தியது

லண்டன், செப்.3

இங்கிலாந்து– பாகிஸ்தான் இடையே நடைபெற்ற மூன்றாவது ரி20 ஆட்டம் கடைசிப் பந்துப் பரிமாற்றம், கடைசி பந்து வரை பரபரப்பாக சென்றது. இங்கி லாந்து அணி வெற்றிக்காகப் போராடி, கடைசியில் 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. பாகிஸ்தான் அணி துடுப்பாட்டத்தில் இரண்டாம் ரி- 20 போலவே சிறப்பாகச் செயற்பட்டது. பந்துவீச்சில் சரியான நேரத்தில் இலக்குகளை வீழ்த்தியதால், இங்கிலாந்து அணியை பாகிஸ்தான் அணி வீழ்த்தியது.

**ரி20 தொடர்**

இங்கிலாந்து பாகிஸ்தான் அணிகள் மூன்று ஆட்டங்கள் கொண்ட ரி20 தொடரில் ஆடின. முதல் ஆட்டம் மழையால் கைவிடப்பட்ட நிலையில், இரண்டாம் ரி-20 ஆட்டத்தில் இங்கிலாந்து அணி அபாரமாக ஆடி 196 என்ற இலக்கைத் துரத்திப் பிடித்து வெற்றி பெற்றது.

**மூன்றாவது ரி-20**

மூன்றாவது ரி-20 ஆட்டத்தில் இங்கிலாந்து அணி நாணயச் சுழற்சி யில் வென்று களத்தடுப்பைத் தெரிவு செய்தது. பாகிஸ்தான் அணிக்கு பாக்கர் ஜமான் (ஒரு ஓட்டம்), பாபர் ஆசாம் (21 ஓட்டங்கள்) சுமாரான ஆரம்பம் அளித்தனர். அடுத்து இணைந்த ஹைதர் அலி மற்றும் முகமது ஹபீஸ் அதிரடி ஆட்டம் ஆடினர்.

**ஹைதர் அலி அரைச் சதம்**

ஹைதர் அலி 33 பந்துகளில் 54 ஓட்டங்கள் குவித்தார். அவர் 5 நான்கு ஓட்டங்கள், 2 ஆறு ஓட்டங்கள் விளாசினார். அவர் ஆட்டமிழந்த பின் ஷதாப் கான் (15 ஓட்டங்கள்), இமாத் வாசிம் (ஆட்டமிழக்காமல் 6 ஓட்டங்கள்) ஆகியோருடன் சேர்ந்து ஹபீஸ் அதிரடி ரன் குவிப்பில் ஈடுபட்டார்.

**ஹபீஸ் அதிரடி**

ஹபீஸ் கடைசி வரை ஆட்டமிழக்காமல் 52 பந்துகளில் 86 ஓட்டங்கள் குவித்தார். 4 நான்கு ஓட்டங்கள், 6 ஆறு ஓட்டங்கள் என இரண்டாவது ஆட்டம் போலவே இந்த ஆட்டத்திலும் அதிரடியாக ஆடி அரைசதம் கடந்து அசத்தினார்.

பாகிஸ்தான் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகள் இழப்புக்கு 190 ஓட்டங்களை எடுத்தது.

**இங்கிலாந்து பந்துவீச்சு**

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில் மொயீன் அலி, டாம் கர்ரன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும், ஜோர்டான் இரு இலக்குகளையும் வீழ்த்தினர். ரஷித் 3 பந்துப் பரிமாற்றங்களில் 40 ஓட்டங்களும், கிரிகோரி 4 பந்துப்பரிமாற்றங்களில் 41 ஓட்டங்களும் கொடுத்துச் சொதப்பி இருந்தனர்.

**இங்கிலாந்து வெல்லும் என்ற எதிர்பார்ப்பு**

191 ஓட்டங்கள் என்ற பெரிய இலக்கை நோக்கி இங்கிலாந்து அணி துரத்தத் தொடங்கியபோது இரண்டாவது ஆட்டம் போலவே எளிதாக அந்த அணி வெல்லும் என்றே அனைவரும் கணித்தனர். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பேர்ஸ்டோ ஓட்டமெதுவும் பெறாது வெளியேறி ஏமாற்றினார்.

**இலக்குகள் வீழ்ச்சி**

அவரைத் தொடர்ந்து மலன் (7 ஓட்டங்கள்), இயான் மார்கன் (10 ஓட்டங்கள்) அடுத்தடுத்து வெளியேறினர். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டாம் பான்டன் 31 பந்துகளில் 46 ஓட்டங்கள் குவித்தார். இதுவரை சோபிக்காத மொயீன் அலி வெறியாட்டம் ஆடினார். மறுபுறம் சாம் பில்லிங்க்ஸ் (26 ஓட்டங்கள்), கிரிகோரி (12 ஓட்டங்கள்), ஜோர்டான் (ஓர் ஓட்டம்) பெற்று வரிசையாக வெளியேறினர்.

**பரபரப்புக்குப் பஞ்சமில்லை**

கடைசி 3 பந்துப் பரிமாற்றங்களில் 30 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் இங்கிலாந்து இருந்தது. அப்போது பாகிஸ்தான் அணி, 18 ஆவது பந்துப்பரிமாற்றத்தில் ஓர் இலக்கையும், 19 ஆவது பந்து பரிமாற்றத்தில் மொயீன் அலி உட்பட 2 இலக்குகளையும் வீழ்த்தி ஆட்டத்தில் திருப்புமுனையை ஏற்படுத்தியது.



**கடைசி பந்துப் பரிமாற்றம்**

மொயீன் அலி 33 பந்துகளில் 61 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அவர் சென்ற பின் கடைசிப் பந்துப் பரிமாற்றத்தில் 17 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலை. அப்போது களத்தில் டாம் கர்ரன்,மற்றும் ரஷித் இருந்தனர். இருவரும் 4 பந்துகளில் 5 ஓட்டங்கள் எடுத்தனர். கடைசி 2 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள் பெற்றால் இங்கிலாந்து வெற்றி பெறலாம் என்ற நிலையில், டாம் கர்ரன் 5ஆவது பந்தில் ஆறு ஓட்டம் அடித்து பரபரப்பை ஏற்படுத்தினார். ஆனால் கடைசிப் பந்தை அவரால் தொட முடியவில்லை.

பாகிஸ்தான் அணி 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்த ஆட்டத்தை வென்று ரி-20 தொடரை 1-1 எனச் சமன் செய்தது. பாகிஸ்தான் அணியில் ஷதாப் கான் 4 ஓவரில் 48 ஓட்டங்கள் கொடுத்து ஏமாற்றினாலும், வஹாப் ரியாஸ், ஷஹீன் ஷா அப்ரிடி ஆகியோர் தலா இரு இலக்குகளையும், இமாத் வாசிம், ஹாரிஸ் ராப் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தி வெற்றிக்கு வழிகோலினர்.

அதிரடியாக ஆடி 86 ஓட்டங்கள் குவித்த ஹபீஸ் ஆட்டநாயகன் விருதை வென்றார். (எ)

# சம்பியனானது மருதங்கேணி

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான எல்லே போட்டியின் இறுதியாட்டத்தில் மருதங்கேணி பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித் துக்கொண்டது.

இந்தப் போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் மருதங்கேணி பிரதேச செயலக அணியை எதிர்த்துக் கரவெட்டி பிரதேச செயலக அணி மோதியது. இதில் கரவெட்டிப் பிரதேச செயலக அணி முதலில் துடுப்பெடுத்தாடி 5 ஓட்டங்களைப் பெற்றது. அடுத்து துடுப்பெடுத்தா டிய மருதங்கேணிப் பிரதேச செயலக அணி 6 ஓட்டங்களைப் பெற்று சம் பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ற-422)

விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
2020 தொழினுட்பப் பிரிவு மாணவர்களுக்கான....
மாபெரும் விசேட செயலமர்வு
செப்ரம்பர் 5,6,7 } பொறியியல் தொழினுட்பவியல், உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்
12,13,14 } தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
19,20,21 } ICT, விவசாய விஞ்ஞானம், புவியியல், கணிதம்(7), ஊடகக்கல்வி
புதிய மாணவர்களும் இணைந்து கொள்ளலாம்.
077 248 7774 / 021 221 7860

Techno World
தொழில்நுட்பக் கல்லூரி
இலவச கருத்தரங்கு-2020
A/L தொழில்நுட்பபிரிவு
September - 5,6
8.00am - 2.30pm
ஆசிரியர்கள்
○ சக்தி ○ முருகநிரோஜன்
○ ராகவன் ○ லவேந்திரன்
அனுமதி இலவசம்
(Full model papers - 01)
(50Mcq, 4 Structure and 6 Essay)
077 017 5346, 077 170 3549

# நெய்மருக்கும் கொரோனாத் தொற்று உறுதி!

பிரேசிலியா, செப். 3

கால்பந்தாட்ட உலகின் ஆகச் சிறந்த வீரர்களில் ஒருவராகக் காணப்படும் பிரேசில் அணியின் நட்சத்திர வீரர் நெய்மருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நெய்மர் கழகங்களைப் பொறுத்த வரையில் பிரான்சின் பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணிக்காக விளையாடி வருகின்றார். ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் கலந்துகொண்ட பின்னர் அவர் ஓய்வுக்காக இபிஸா தீவுக்குச் சென்றிருந்தார். அங்கு தான் அவருக்குக் கொரோனா தொற்றியது என்று தெரிவிக்கப்படுகின்றது.

நெய்மர் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். அவருக்கு சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம)



வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
DHL
சகல நாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை எம் ஊடாக நடைபெறுகின்றன. மிக குறைந்த கட்டணத்தில் வடமாகாணத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட முகவர்
திருமுருகன் கொம்நெற் (Pvt) Ltd
321, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 0777554528, 0212227835

நீர்க்கசிவை தடுப்பதற்கு
வடமாகாணத்தில் நீர்க்கசிவை தடுப்பதற்கு இரசாயனங்களை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர்கள்.
எம்மால் அறிமுகப்படுத்தியிருக்கும் புதிய தொழில்நுட்பத்தின் மூலம் சிமெந்திலாலான கட்டடங்களில் ஏற்படும் நீர்க்கசிவுகளை நீர் கசிந்து கொண்டிருக்கும்போதே உடனடியாக உத்தரவாதத்துடன் நிறுத்தித்தருகின்றோம்.
North and East Engineering
55, Stanley Road, Jaffna
077 524 4177, 077 232 3000, 021 222 2363



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.